கல்கி
பொருளடக்கம்

மலர் 6 இதழ் 18 | 1946 டிசம்பர் 1 | விய ஆண்டு கார்த்திகை 16

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

கப்பலோட்டிய தமிழர், செக்கிழுத்த தியாகி, தூத்துக்குடி தேசபக்தர், இரு ஜன்மக் கைதி முதலான சிறப்புப் பெயர்களைக் கொண்ட ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் திவ்ய சிலை வடிவம் இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கிறது. அவருக்குப் பின்னால் திரை கடலும் சுதேசக் கப்பல்களும் சுதந்திரக் கொடியும் 'ஜம்'மென்று காட்சி அளிக்கின்றன.

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை அவர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்; ஆங்கில ஆட்சியை அடியோடு வெறுத்தவர்; 'குவிட் இந்தியா' சுலோகத்தின் மூல புருஷர்; வெள்ளைக்காரர்களைக் கூண்டோடு கைலாசமாகக் கப்பலில் ஏற்றிச் சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்ற அளவில்லாத ஆர்வம் கொண்டவர்.



"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பது பழமொழி. திரைகடலில் கப்பல் ஓட்டுவதற்காகக் கப்பல் கட்டும் பொருட்டு திரவியம் தேட முனைந்தார் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை. இதற்காகப் பிள்ளையவர்கள் சொந்த ஊரை விட்டு, மனைவி மக்களைப் பிரிந்து வடதேசம் சென்றார். லட்சக் கணக்கிலே பொருள் சேர்த்தனர். 'லாவோ' 'காலியா' என்ற இரு கப்பல்களையும் விலைக்கு வாங்கினார். கப்பலிலேயே தூத்துக்குடி துறைமுகத்தில் வந்திறங்கினார். அவ்வளவுதான்; தமிழகத்துக்கும் இலங்கைத்துக்கும் வியாபாரப் பொருள்களை ஏற்றிச் சென்ற விதேசக் கப்பல்களின் வாயில் மண் விழுந்தது. காலியா கப்பல் வந்ததும் விதேசக் கப்பல்கள் 'காலியா'யின. 'லாவோ' கப்பல் வந்ததும், அதில் ஏற்ற மூட்டைகள் வந்து விழுந்தன.

இத்தகைய மாபெரும் தியாகியினுடைய பூத உடல் மறைந்தாலும் புகழுடம்பு சாசுவதமாக இந்த நாட்டில் நிலைத்து நிற்கிறது. அப் பெரியாரின் அழியாத ஞாபகச் சின்னம் தமிழகத்தின் கடற்கரையில் கம்பீரமாகக் காட்சி அளிக்க வேண்டும்.

"வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்—அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல்விடுவோம்"

என்ற பாரதியாரின் அருள் வாக்குப் பலிக்க வேண்டும்.

[குறிப்பு:—இந்த அட்டைப் படம் ஸ்ரீ வ. உ. சிதம்பரனார் நினைவு விழா நாளின்போதே வெளியிடுவதற்காக உத்தேசிக்கப்பட்டது. ஆனால் சிறிது தாமதமாகவே தயாராயிற்று. அதனால் என்ன? நமது செந்தமிழ் நாட்டில் எல்லா நல்ல காரியங்களையும் நாம் சிறிது தாமதமாகத்தானே செய்து வருகிறோம்? பாரதியாருக்கும் வ. உ. சி.க்கும் ஞாபகச் சின்னம் நிறுவ இப்போதுதானே முயற்சி தொடங்கி யிருக்கிறோம்?]

சித்திரம்: "சந்திரா"

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 18

என்ன சேதி?

ஒரு சிறு குண்டு

நம்முடைய தென்னிந்திய ரயில்வே மானேஜர் மிஸ்டர் ரெயினல்ட்ஸ் துரை அவர்கள் சமீபத்தில் டில்லியில் நடந்த இந்திய ரயில்வே மகாநாட்டு ஐம்பதாவது வருஷ விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் ஒரு சிறு வெடி குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார்.

யுத்த காலத்தில் ரயில்வேக்களுக்குக் கிடைத்த லாபம் இனிமேல் கிடைக்காதென்றும் இனிமேல் வருஷா வருஷம் ரயில்வே பட்ஜெட்டில் துண்டு விழுமென்றும் தற்போது துண்டு விழும் ரீதியிலிருந்து பார்த்தால் 1949-50ல் துண்டு விழும் தொகை முப்பது கோடிக்கு மேலே போகுமென்றும் சொல்லியிருக்கிறார்.

துண்டு விழும் மேற்படி தொகையைச் சரிக் கட்டுவதற்கு என்ன வழி என்று மிஸ்டர் ரெயினல்ட்ஸ் தலையைச் சொறிந்து கொண்டு ரொம்பத் தீவிரமாக ஆலோசித்த போது, ஸ்ரீமான் மூன்றாம் வகுப்புப் பிரயாணியார் மூட்டைப் பூச்சிக் கடியுடன் முகத்தைச் சிணுக்கிக் கொண்டு அவர்கள் முன்னால் நிற்கிறார்!

உடனே, ரயில் பிரயாணிகளின் கட்டணத்தை உயர்த்தியே யாகவேண்டும், வேறு வழியில்லையென்ற முடிவுக்கு வந்திருக்கிறார் மிஸ்டர் ரெயினல்ட்ஸ்.

மிஸ்டர் ரெயினல்ட்ஸின் கண்ணுக்கு மேற்கண்டவாறு ரயில் பிரயாணிகள் மாத்திரமே காட்சியளித்த போதிலும், நம்முடைய ரயில்வே மந்திரி ஜனாப் ஆஸப் அலி மேற்படி துண்டு விழும் தொகையைச் சமாளிக்கப் பிரயாணிகளை மட்டுமே நம்பியிருக்கவில்லை. இப்போது தேசத்தில் தொழில் வளர்ச்சி அதிகமாகியிருப்பதால் இனிமேல் சாமான் போக்கு வரத்து பல மடங்காகி, அதன் மூலம் ரயில்வே வருமானம் அதிகமாகக் கிடைக்குமென்று அவர் உறுதியாக நம்புகிறார்.


ஜனாப் ஆஸப் அலியின் நம்பிக்கை நிறைவேற வேண்டும் என்றுதான் நாமும் ஆசைப்படுகிறோம். அவர் சொல்கிறபடி, தேசத்தில் புதிதாக உற்பத்தியாகும் சாமான் மூட்டைகள் ரயில்வே ஸ்டேஷன்களில் மலைபோலக் குவிந்து, மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் என்கிற பிராணிகள் மிஸ்டர் ரெயினல்ட்ஸ் வகையரா துரைமார்களின் கண்ணுக்குத் தெரியாதபடி மறைத்து விட்டாலும் நல்லதுதான்!

அதிசய ரேஷன்


கழுதை தேய்ந்து கட்டெறும்பானதென்று ஒரு பழமொழி இருக்கிறது அல்லவா? அதற்குப் பொருத்தமான சிறந்த உதாரணம் ஒன்று இருக்குமானால் அது சென்னை சர்க்காரின் ஜவுளி ரேஷனாகவே இருக்க வேண்டும். இங்கே கழுதை தேய்ந்து கட்டெறும்பானதுடன் மாத்திரம் நிற்கவில்லை; அதுவும் தேய்ந்து சிற்றெறும்பாகவே ஆகி விட்டது!

சென்னை நகரத்திலே வயது வந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் 12 கெஜமும் குழந்தைகளுக்கு 6 கெஜமும் வெளியூரிலிருப்பவர்களுக்கு முறையே 6 கெஜமும் 3 கெஜமும் மில் துணி கொடுப்பதென்று முன்பு யோசனை செய்திருந்தார்கள். இதுவே போதாதென்று பலர் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும்போது, சென்னை சர்க்கார்


பிரகாசம் சர்க்காரின் மில் ஜவுளி பங்கீடு



முதலில் சொன்ன திட்டம்



மாற்றப்பட்ட திட்டம்



கடைசியில் தீர்ந்த திட்டம்

ஆர அமரப் பொறுத்து ஆலோசித்து இப்போது தங்கள் முடிவான தீர்மானத்தைச் சொல்லியிருக்கிறார்கள். கிராமத்தார் பட்டணத்தார் என்ற வேற்றுமையில்லாமல் வயது வந்த ஜனங்கள் எல்லாருக்கும் தலைக்கு 5 கெஜம் மில் துணியாம்! இரண்டு முதல் பன்னிரண்டு வயது வரையுள்ள குழந்தை ஒவ்வொன்றுக்கும் 2 கெஜம் கொடுக்கப்படுமாம்! இரண்டு வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்குத் துணியே இல்லையாம்! அவை பிறந்த மேனிக்கு விளங்க வேண்டியதுதானாம்!

வருஷம் ஒன்றுக்குப் பெரியவர்களுக்கு ஐந்து கெஜம் துணி கொடுக்கிறார்கள் அல்லவா? இந்த 5 கெஜம்கூட மொத்தமாகக் கிடைக்காது! ஆறுமாதத்துக்கு ஒரு முறை இரண்டரை இரண்டரை கெஜமாகவே வாங்க முடியும்.

இந்த மாகாணத்துப் பெண்களிலே பலர் ஆறு கெஜத்திலிருந்து ஒன்பது கெஜம் வரை சேலை உடுத்தக் கூடியவர்கள். அவர்களில் மிகப் பெரும்பாலோர் கைத்தறிச் சேலை வாங்க முடியாத ஏழ்மை நிலையில் உள்ளவர்கள். சென்னை சர்க்காரின் மில் ஜவுளி ரேஷன் அமுலுக்கு வந்தால் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை நம் சென்னை மாகாணப் பிரதம மந்திரி திவ்யப் பிரகாசம்காருதான் பிரகாசப்படுத்த வேண்டும்!

நிகழ்ச்சிச் சித்திரம்



தடுமாற்றமா? தகிடுதத்தமா?

மீண்டும் கரிய மேகங்கள் நாலா திசையிலும் குமுறுகின்றன; அண்டகடாகத்தின் அடிவாரத்திலிருந்து இடிகள் உறுமுகின்றன; சண்டமாருதமும் சுழற் காற்றும் சேர்ந்து அடிக்கப் போகின்றன என்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன; பூமியின் கர்ப்பத்திலிருந்து ஏதோ ஒரு ரோமம் சிலிர்க்கும் சத்தம் கேட்கின்றது; பிரளய காலமே நெருங்கிவிட்டதுபோல் தோன்றுகிறது. இந்திய அரசியல் உலகத்திலேதான் இவ்வளவு உற்பாதங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

* * *

சுதந்திரத் தேவி மிகவும் பொல்லாதவள்; குரூரமானவள் என்றும் சொல்லலாம். அவளிடம் காதல் கொண்டவர்களை அல்லல்களுக்கு உள்ளாக்கி வருத்து எடுத்துத் துன்புறுத்துவதில் அவளுக்கு அதிக பிரியம். "கொண்டு வா பலி!" என்று சொல்வாள். "தலையை வெட்டிக் கையிலே ஏந்திக் கொண்டு நில்!" என்பாள். "இரத்த ஆறு ஓட வேண்டும்!" என்பாள். இதை யெல்லாம் செய்தாலோ, "நீ மிகக் குரூரமானவன்; கொடியவன்; என்னுடைய காதலுக்குத் தகுதியற்றவன்" என்பாள். "அமைதியாயிரு! சாந்தமாயிரு!" என்று உபதேசிப்பாள். அதன்படி நடந்தால், "கோழை நீ; வீரமற்றவன்!" என்று நிந்திப்பாள். "பட்டம் பதவிகளை யெல்லாம் விட்டுவிட்டு வா!" என்பாள். விட்டுவிட்டு வந்தால், "பைத்தியக்காரன்! பேதை! கையிலிருந்த பதவியை யாராவது கைவிட்டு நிற்பார்களா?" என்று பரிகசிப்பாள். இத்தனை சோதனைகளுக்கும் ஒருவன் ஈடு கொடுத்துக் கொண்டு உறுதியாக நின்றால், அவனை உலகமறிய நவரத்தின சிம்மாதனத்தில் ஏற்றி வைத்து சாம்ராஜ்ய மணிமகுடத்தைச் சூட்டுவாள்!

சுதந்திரத் தேவியின் மேற்கூறிய இயல்பை யெல்லாம் நன்கறிந்திருந்த படியினால்தான் மகாகவி பாரதியார்,

"இதந்தரு மனையினீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்

பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந்து இழிவுற்றாலும்

விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட்டாலும்

சுதந்திரத் தேவிநின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே!"

என்ற பாடலைப் பாடினார் போலும். சுதந்திரத் தேவியின் அருள் பெறுவதற்கு முன்னால் வீடு வாசலை விட்டுச் சிறைப்பட வேண்டியிருக்கும், பதவிகளையும் செல்வங்களையும் விட வேண்டியிருக்கும், எத்தனையோ கோடி இன்னல்களை அநுபவிக்க வேண்டியிருக்கும் என்று நமது வரகவியின் வாக்கிலே வந்த உண்மையை இந்தியாவின் சுதந்திரப் போரிலே இதுவரை கண்டு வந்திருக்கிறோம். இனியும் காணப் போகிறோம் என்பதற்கு அறிகுறிகளைப் பார்க்கிறோம்.

* * *

இந்தியாவுக்குப் பரிபூரண சுதந்திரம் கிட்டி விட்டது, சுதந்திர மாளிகையின் திறந்த வாசலில் நிற்கிறோம் என்று எண்ணி நாம் இறுமாந்திருந்தோம். இருபத்தைந்து வருஷ காலம் இடைவிடாமல் சுதந்திரப் போர் நடத்திய நமது தீரத் தலைவர்கள் புதுடில்லியில் அமர்ந்து தங்கு தடையின்றிச் சுதந்திர அரசாங்கம் நடத்துகிறார்கள் என்று எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தோம். அந்த கைய வீர சுதந்திரத் தலைவர்களின் ஆட்சி மூன்று மாதம் நடப்பதற்குள்ளாக எத்தனையோ இடையூறுகளையும் தடங்கல்களையும் அவர்கள் சமாளிக்க வேண்டியிருந்ததென்பதை இப்போது அறிகிறோம். சென்ற வாரம் நடைபெற்ற மீரத் காங்கிரஸில் பண்டித ஜவாஹர்லால் நேரு, ஸ்ரீ வல்லபாய் படேல் முதலியவர்களின் பிரசங்கங்களிலிருந்து மேற்படி உண்மைகளை நாம் அறியலானோம்.

முஸ்லிம் லீக் தலைவர்களினாலும், அவர்களுடைய வெறியூட்டும் பிரசங்கங்களினாலும் காரியங்களினாலும் ஏற்பட்ட இடைஞ்சல்களையும் தடங்கல்களையும்பற்றி மட்டும்நமது தலைவர்கள் சொல்லவில்லை. ஆசாபங்கமடைந்த முஸ்லிம் லீக் தலைவர்கள் அப்படியெல்லாம் தலைகால் தெரியாத காரியங்களில் இறங்கித் தேச நலத்துக்கு ஹானி விளைப்பார்கள் என்பது ஒருவாறு எல்லாரும் எதிர்பார்த்த விஷயந்தான். அதையெல்லாம் சமாளித்து நிற்கவும் தியாக வீரர்களான நமது தலைவர்கள் சக்தி வாய்ந்தவர்கள்தான்.

ஆனால் இந்தியா தேசத்துக்கு எப்படியாவது சுதந்திரம் கொடுத்துவிட வேண்டுமென்றும், இந்தியாவின் ஆட்சியை இந்தியர்களின் கையிலே ஒப்படைத்துவிட வேண்டுமென்றும் தூக்கமில்லாமல் தவித்துக் கொண்டிருந்ததாகச் சொல்லி, உலகமறியப் பறைசாற்றியும் வந்த வைஸ்ராய் வேவலின் போக்குத்தான் நமது தலைவர்களுக்கு அதிசயமாயிருந்திருக்கிறது. அதைப்பற்றி அவர்களுடைய பேச்சுக்களிலிருந்து அறிந்துகொண்ட நமக்கும் வியப்பாக இருக்கிறது.

*　　*　　*

நீண்டகால சுதந்திரத் திட்டத்தை—அதாவது அரசியல் நிர்ணய சபையை — ஒப்புக் கொள்கிறவர்களைக் கொண்டு இடைக்கால சர்க்கார் அமைக்கப்படும் என்று பிரிட்டிஷ் மந்திரிகளும் வைஸ்ராய் வேவலும் சொன்னார்கள்.

நீண்டகாலத் திட்டத்தில் சிற்சில அம்சங்கள் காங்கிரஸுக்குப் பிடிக்கவில்லை. ஆனபோதிலும் — அதாவது குறைகள் பல இருந்தபோதிலும் — மேற்படி ''திட்டத்தை முழுமையும் ஒப்புக் கொள்வதாக''க் காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியது.

முதலிலே இரண்டு திட்டங்களையும் அப்படியே ஒப்புக்கொண்ட முஸ்லிம் லீகோ, பிற்பாடு இரு திட்டங்களையும் அடியோடு நிராகரித்து விட்டது.

ஆகவே, பிரிட்டிஷ் மந்திரிகளும் வைஸ்ராயும் தந்த வாக்குறுதியின்படி காங்கிரஸ் தலைவர்களைக்கொண்டு இடைக்கால சர்க்கார் ஏற்பட்டது.

இதைப் பார்த்ததும் முஸ்லிம் லீக் தலைவர்களுக்கு வயிற்றெரிச்சல் உண்டாகி, அவர்கள் என்னவெல்லாமோ பேசினார்கள்; செய்தார்கள். அவற்றின் பயனாகக் கல்கத்தாவிலும், கீழ் வங்காளத்திலும், பிஹாரிலும் விபரீத சம்பவங்கள் நிகழ்ந்தன.

வைஸ்ராய் வேவல் நேர்மையுடையவராயிருந்தால், மேற்படி சம்பவங்களுக்கெல்லாம் முஸ்லிம் லீக் தலைவர்களைப் பொறுப்பாக்கி அவர்களிடம் வருங்காலத்திலாவது ஒழுங்காக நடந்துகொள்வதாக உத்தரவாதம் பெற்றிருக்க வேண்டும்.

அப்படிக்கின்றி மேலும் மேலும் அக்கிரமத்துக்கும் பயமுறுத்தலுக்கும் இணங்கிக் கொடுக்கும் முறையை, அதாவது பழைய காலஞ் சென்ற சேம்பர்லின் மூனிச்சில் கடைப்பிடித்த கொள்கையை, வைஸ்ராய் வேவல் கடைப் பிடித்து வந்திருப்பதாக இப்போது தெரிய வருகிறது.

முக்கியமாக, முஸ்லிம் லீக் அங்கத்தினரை இடைக்கால சர்க்காரில் பலவந்தமாகச் சேர்த்த விஷயத்தில் மேற்படி மூனிச் கொள்கையை வைஸ்ராய் வேவல் கையாண்டிருக்கிறார்.

நீண்டகாலத் திட்டத்தை முஸ்லிம் லீக் ஒப்புக்கொள்ளும் என்று ஜனாப் ஜின்னா சொன்னதின் பேரிலேயே வைஸ்ராய் வேவல் மேற்படி காரியத்தைச் செய்ததாகக் கடிதப் போக்குவரவிலிருந்து தெரிகிறது. ஆனால் ஜனாப் ஜின்னா இப்போது அந்த வாக்கை நிறைவேற்றாமல் சால்ஜாப்பு சொல்லும்போது வைஸ்ராய் வேவல் இன்னது செய்வதென்று தெரியாமல் விழிக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஜனாப் ஜின்னாவை வற்புறுத்தி வாக்கை நிறைவேற்றும்படி செய்ய அவரால் முடியவில்லை. உண்மையாகவே வைஸ்ராய்க்கு அந்தச் சக்தி யில்லையா, அல்லது வேஷம் போடுகிறாரா என்னும் சந்தேகம் ஏற்படும்படியான காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. வைஸ்ராய் வேவல் அரசியல் நிர்ணய சபையை டிசம்பர் 9உ கூட்டியே தீர்வதென்று தீர்மானித்தபோது ஜனாப் ஜின்னா அந்தத் தீர்மானத்தைப் பற்றி ''முழு மூடத்தனம்'' ''வடிகட்டிய மௌடீகம்'' என்றெல்லாம் புகழ் மாலை சூட்டியிருக்கிறார். அதையெல்லாம் வேவல் சிவனே என்று வாங்கிக் கட்டிக் கொண்டு சும்மா இருக்கிறார்.

''எப்போது அரசியல் நிர்ணய சபைக்கு முஸ்லிம் லீக் வரவில்லையோ, அப்போது இடைக்கால சர்க்காரிலிருந்தும் வெளியேற வேண்டியது

தானே" என்று சொல்ல அவருக்குத் தைரியமில்லையா அல்லது மனமில்லையா என்பதுதான் சந்தேகமாயிருக்கிறது. அவருடைய குழப்பத்துக்குக் காரணம் உண்மையிலேயே இன்னது செய்வதென்று தெரியாத தடுமாற்றமா அல்லது அந்தரங்க தகிடுதத்தமா என்பது இன்னும் விளங்காமலிருக்கிறது.

* * *

மேற்கூறிய திவ்யமான நெருக்கடியையும் குழப்பத்தையும் இந்திய அரசியலில் ஏற்படுத்திவிட்டு வைஸராய் வேவல் கையைப் பிசைந்த வண்ணம் விழித்துக்கொண்டு நின்றபோது பிரிட்டிஷ் மந்திரிகள் அவருடைய ஒத்தாசைக்கு முன் வந்தார்கள். முன் வந்து வைஸராயையும் காங்கிரஸ் தலைவர்கள் இருவரையும் லீக் தலைவர்கள் இருவரையும் சீக்கியத் தலைவர் ஒருவரையும் லண்டனுக்கு அழைத்தார்கள்.

காங்கிரஸ் தலைவர்களும் சீக்கியத் தலைவரும் அழைப்பை மறுத்துவிட்டதாகவும், லீக் தலைவர்கள் மட்டும் அதை ஒப்புக்கொண்டு வைஸராயுடன் சனிக்கிழமை பிரயாணப்படுவதாகவும் கடைசியாக வந்த செய்திகள் கூறுகின்றன.

காங்கிரஸ் தலைவர்கள் தீர்க்காலோசனை செய்துதான் மேற்படி தீர்மானம் செய்திருப்பார்கள். பிரிட்டிஷ் மந்திரிகள் அவர்களிடம் கேட்பதற்கோ கலந்தாலோசிப்பதற்கோ விஷயம் என்ன இருக்கிறது?

லீக் தலைவர்களிடம் அவர்கள் கேட்பதற்குத்தான் எத்தனையோ கேள்விகள் இருக்கின்றன.


முதலில் இரண்டு திட்டங்களையும் லீக் ஒப்புக் கொண்டதும், அப்புறம் இரண்டு திட்டங்களையும் மறுத்ததும், பிறகு மறுபடியும் ஒப்புக்கொள்வதாகச் சொல்லி இடைக்கால சர்க்காரில் சேர்ந்ததும், சேர்ந்த பிறகு மற்றவர்களுடன் ஒத்துழைக்காமல் முரண்டு பிடித்து வருவதும், இப்போது அரசியல் நிர்ணய சபைக்கு வர மறுப்பதும், கல்கத்தா நவகாளிக் கொடுமைகளை உண்டுபண்ணியதும், ஆகிய இதற்கெல்லாம் சமாதானம் என்ன சொல்கிறீர்கள் என்று லீக் தலைவர்களைத்தான் பிரிட்டிஷ் மந்திரிகள் கேட்க வேண்டும். கேட்டு, சரியான புத்திமதியும் சொல்லி அனுப்ப வேண்டும்.

அப்படியின்றி, இது வழக்கமான பிரிட்டிஷ் இராஜதந்திர சூழ்ச்சியாயிருக்கும் பட்சத்தில், அதாவது காங்கிரஸ் தலைவர்களைச் சர்க்காரிலிருந்து அப்புறப்படுத்தி விடவேண்டும் என்ற உத்தேசத்துடனே வேவல் லண்டனுக்குப் போவதாயிருக்கும் பட்சத்தில், அவருடைய சூழ்ச்சிக்கு பிரிட்டிஷ் மந்திரிகளும் செவி கொடுத்து இந்தியாவில் மீண்டும் அரசியல் குழப்பத்தை உண்டு பண்ணுவதாயிருக்கும் பட்சத்தில், அந்த நிலைமைக்கும் முற்றிலும் ஆயத்தமாயிருப்பதாக மீரத் காங்கிரஸ் உலகமறியப் பறையறைவித்திருக்கிறது.

சுதந்திர தேவியின் பூரண அருளைப் பெறுவதற்காக மீண்டும் பதவியை உதறித் தள்ளவும், சிறை புகவும், இன்னும் பல கோடி இன்னல்களை அநுபவிக்கவும் தயாராயிருக்கிறோம் என்று நமது மாபெரும் காங்கிரஸ் தலைவர்களும் பிரதிநிதிகளும் மீரத் காங்கிரஸில் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்தியாவின் சுதந்திரத்துக்காக மீண்டும் ஒரு பெரும் போர் நடத்தியே தீரவேண்டும் என்று ஏற்படும் பட்சத்தில் அந்தப் போரில் நமது தலைவர்களை இந்திய மக்கள் பூரணமாக ஆதரித்து நிற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

அது மட்டுமல்ல; உலக அபிப்பிராயமும் இந்தியாவின் இறுதியான சுதந்திரப் போரை முன்னைப்போதையும்விட அதிக சக்தியுடன் ஆதரிக்கும் என்று நிச்சயமாய் எதிர்பார்க்கலாம்.



தேசம் சுதந்திரம் அடைவதைத் தடுப்பதற்கு ஜனாப் ஜின்னா செய்யும் முயற்சியில் வைஸ்ராய் வேவலும் உடந்தையாயிருப்பதாகச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

மீரத் காட்சிகள்



1. பழைய ராஷ்டிரபதியும் புதிய ராஷ்டிரபதியும்





3. மீசையை நீக்கி விட்ட உணவு மந்திரி பாபு ராஜேந்திர பிரசாதும் அ. இ. காங்கிரஸின் பொதுக் காரியதரிசி ஸ்ரீ கேல்கரும்.







4. மீரத் காங்கிரஸில் பண்டித ஜவாஹர் வீரப் பிரசங்கம் புரிகிறார்.

5. படேலும் ஜவாஹரும் மகா நாட்டுப் பந்தலுக்குள் பிரவேசிக்கின்றனர்.

6. எல்லைப்புற காந்தியும் மௌலானா அபுல்கலாம் ஆஸாதும் விஜயம் செய்கிறார்கள்.

வான சஞ்சாரம்



இசைத் தேவி

கோட்டு வாத்யத்தைப் பிரத்யேக முறையில் கையாளும் சில வித்வான்களில் துரையப்ப பாகவதர் ஒருவர். 21-ல் சென்னையில் நடந்த அவரது கச்சேரியில், கல்யாணி விஸ்தாரமாயும் கனிசமாயு மிருந்தது. மலய மாருதமும், ஹிந்தோளமும் வனப்பா யிருந்தன. 'பெண் இவளல்ல ராமா' கருப்படியில் பாவம் பொழிந்தது.

25-ல் திருச்சியில் வீணை வாசித்த தேசமங்கலம் சுப்ரமணிய அய்யர் அவ்வாத்யத்தில் கைதேர்ந்த பழம்பெரும் வித்வான். 'எவரனி' கிருதியின் ராகம் வெறும் கரஹரப்ரியா அல்ல. அதிலிருந்து சற்று வித்யாசமான தேவாம்ருதவர்ஷனி என்பதை நிரூபித்தார். அத்துடன் சாதாரணமாய் அதிகம் கையாளப்படாத [illegible] விளக்கியது போற்றத்தக்கது. கல்யாணி ராகம், தானம், பல்லவிகளில் அவரது ஞான பாவம் நன்கு வெளிவந்தது. ஆனால், விவரமில்லாத அவசர பிர்க்காவைக் கொட்டும் இந்தக் காலத்து வழி மாதிரி, அவர் அடிக்கடி கொடுத்த சில பிடிகள் மாத்திரம் வீணைக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை.

19-ல் திருச்சியில் என். வி. வனந்த கோவிலத்தின் முழு நேரக் கச்சேரியும் 19-ல் சென்னையில் எம். ஜீ. கௌரிகுமாரியின் வீணை வாத்யமும் எதிர்பார்த்தது போல் சிறப்பா யிருந்தன.

• • •

19-ல் சென்னையிலிருந்து கேட்ட ஒரு இனிய கானத்தில், சாவேரி, ஆனந்தபைரவி ராகங்களும், 'வலருதாவ' என்ற வாரணி பதமும், வீணை தனம் பாணியாக இழைந்திழைந்து நாஸுக்காய் வெளிவந்தன. பாடியவர் ஏ. ஆர். சுந்தரம்.

20-ல் சென்னையில் என். ராஜரத்னம் வாசித்த வயலின் வாத்யத்தில், ஹரிகாம்போதி, கல்யாணி ராகங்கள் தரமா யிருந்தன.

கதா காலக்ஷேபம் செய்யும் திருவனந்தபுரம் சகோதரிகளில், பி. எஸ். சுப்புலக்ஷ்மி 24-லும், பி. எஸ். லக்ஷ்மி 25-லும், திருச்சியில் தனித்தனியாகக் கச்சேரி செய்தார்கள். இருவரும், தங்கள் [illegible] நீலகண்ட சிவப்பெரியாரின் கருப்படிகளையே பாடினார்கள். பின்னவர், எதுராயும் சரளமான உதவியுடையும் கொண்ட குரலில், ஆரபி, தோடி, பேகடா ராகங்களையும் கருப்படிகளையும் நல்வடிவங்களாய்ச் சித்திரித்தார். முன்னவர் நடுத்தரக் குரலில் தர்பார், நாட்டக் குறிஞ்சி ராகங்களைச் சமாளித்தார். இறுதியில் கேட்ட ஸ்ரீ ராகம் சிறப்பா யிருந்தது.

வைரவிழா நாடகம்

சாவி

சென்ற 18-11-46 திங்கட் கிழமை சாயந்திரம் வால்டாக்ஸ் ரோடு வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். எனக்குத் தெரிந்த ஆசாமி ஒருவர் எதிர்ப்பட்டார்.

"எங்கே ஸார் போகிறீர்கள்?" என்று அவர் என்னை ஆவலுடன் விசாரித்தார்.

"பைத்தியக்காரன் நாடகம் பார்க்க?" என்றேன்.

"என்ன? பைத்தியக்காரன் நாடகத்துக்கா? அட பாவமே! நன்று பிழைத்தீர்களே; அங்கே எதற்கு ஸார் போகிறீர்கள்?" என்று மிகவும் என் மீது இரக்கப்பட்டவராய் வினவினார்.

"ஓய்! எதற்காக அப்படிப் பயமுறுத்துகிறீர்? விஷயத்தைச் சொல்லும்" என்று கேட்டேன்.


"ஒன்றுமில்லை; அந்த நாடகத்தைப் பார்க்கப் போகிறவர்களுக்கெல்லாம் பைத்தியம் பிடித்துப்போகிறதாம். பிறகு பைத்தியம் முற்றி மறுபடியும் மறுபடியும் நாடகத்தைப் பார்க்க ஆரம்பித்து விடுகிறார்களாம். அதற்குத்தான் எச்சரித்தேன்" என்றார்.

"இருக்கட்டும்; நான் எங்கிருந்து வருகிறேன் என்று உமக்குத் தெரியுமா?" என்று அவரை மடக்கிக் கேட்டேன்.

"தெரியாது" என்றார் அந்த ஆசாமி.

"கீழ்ப்பாக்கத்திலிருந்து!" என்றேன்.

அவ்வளவுதான்! அவர் ஒரு முறை என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டுப் பேசாமல் போய்விட்டார்.



சேகர் : சகஸ்ரநாமம்



ஆறுமுக முதலியார்

மேற்படி நண்பர் எச்சரிக்கை செய்தும் கூட நான் நாடகத்தைப் பார்த்து விடுவதென்ற முடிவுடனேயே கொட்டகைக்குச் சென்றேன்.

நண்பர் எச்சரிக்கை செய்தபடி ஒரு வேளை நாடகத்தை மறுமுறை பார்க்க வேண்டுமென்ற பைத்தியம் எனக்குப் பிடித்த போதிலும் மறுதினம் நாடகம் கிடையாதாகையால் கவலையின்றிச் சென்றேன். ஏனெனில் அன்று மேற்படி நாடகத்துக்குக் கடைசி நாள் என்று ஏற்கெனவே அறிந்திருந்தேன்.

உண்மையில் நாடகத்தைப் போய்ப் பார்த்ததும் மேற்படி நண்பர் கூறியது முற்றிலும் சரி என்பது நிரூபணம் ஆயிற்று. நாடகத்தின் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் ஒரே பிரமிப்பும் திகைப்பும் மயிர்க்கூச்செறியும் சம்பவங்களுமாகப் பார்ப்பவர்களைப் பதற அடித்துப் பைத்தியம் பிடிக்கச் செய்து விடுகின்றன. சமூகத்திலுள்ள மூடப் பழக்கங்கள் காரணமாக இளம் பெண்கள் வாழ்க்கையில் அநுபவிக்க நேரும் கஷ்டங்களை எடுத்துக் காட்டுவது கதையின் முக்கிய நோக்கம்.

சேகர் என்பவனுக்கு நளினி என்றொரு தங்கை இருக்கிறாள். அவள் பால்ய விதவையாகிப் பிறந்தகம் வந்து சேருகிறாள். சேகர் அவளுக்கு மறுமணம் செய்விக்கப் பெரு முயற்சி செய்கிறான். தகப்பனாருடன் வாதாடுகிறான். தகப்பனார் ஒரு வயது சென்ற கிழவர். அவர் ஒரு பட்டணத்து நாக



வேலைக்காரச் சனியன்

ரிகப் பெண்ணை இரண்டாந் தாரமாகக் கலியாணம் செய்து கொள்கிறார்.

சேகர் கனினாவுக்கு மறு மணம் செய்விக்காமல் தானும் விவாகம் செய்து கொள்வதில்லை என்று தீர்மானிக்கிறான். இதற்கிடையில் கனினா சோமு என்ற வாலிபனால் கெடுக்கப்பட்டு அவமானம் தாங்காமல் தற்கொலைசெய்து கொள்கிறாள். இதன் காரணமாகச் சேகருக்குச் சித்தப் பிரமை பிடித்துப் பைத்தியக் காரனாக மாறுகிறான்.

கதாநாயகன் சேகராகத் தோன்றும் ஸ்ரீ சகஸ்ரநாமம் தமது அபார நடிப்பினாலும் பயங்கர விழிப்பினாலும் உணர்ச்சி மிகுந்த பேச்சினாலும் சபையோரை நாடக மேடை என்பதையே மறக்கச் செய்து விடுகிறார். தன்னுடைய தங்கையின் விவாகத்தின் போது மணப்பந்தலில் மிகவும் இயற்கையாக நடிக்கிறார். புது அங்கவஸ்திரத்தைப் புரள புரளப் போட்டுக்கொண்டு அவர் குறுக்கும் நெடுக்கும் நடந்து கலியாணத்துக்கு வருபவர்களை உபசரிக்கும் போது ஏதோ நாமெல்லாம் நிஜமாகவே ஒரு கலியாண வீட்டில் தங்கி யிருப்பதைப் போன்ற பிரமை தோன்றி விடுகிறது. பின்னர் அவருடைய இயற்கையான நடிப்பின் காரணமாகச் சபையிலுள்ளவர்கள் தம்மையே மறந்து போகிறார்கள். அப்புறம், கதா நாயகன் சிரித்தால் சிரிக்கிறார்கள். அழுதால் அழுகிறார்கள். அவன் மனம் பதறினால் இவர்களுடைய மார்பு விம்முகிறது. அவன் கோபம் கொண்டால் இவர்கள் ரௌத்ராகாரமாய் மாறுகிறார்கள். அவன் கொலை செய்யும்போது இவர்கள் கண்களை மூடிக் கொள்கிறார்கள்! கடைசியாக அவனுக்குச் சித்தப் பிரமை ஏற்படும்போது இவர்களுக்குப் பைத்தியமே பிடித்து விடுகிறது.

கதாநாயகனைப் போலவே மற்ற கதாபாத்திரங்களும் திறமையுடன் நடித்து ரசிகர்களின் பாராட்டுதலுக்குப் பாத்திரமாகிறார்கள். ஒவ்வொரு நடிகரும் போட்டி போட்டுக் கொண்டு பிரமாதமாக நடித்தார்கள். மிகைபாடு குறைபாடு என்பது என்னவும் கிடையாது. பால்காரியோ அசல் பால்காரிதான். (அதாவது அவள் விற்கும் பால் தண்ணீர் கலந்த பால்தான்!) வேலைக்கார சனியனோ? (ஆமாம்! சத்தியமங்கலம் நித்தியானந்தத்தின் திரிபு சனி!) அபாரம்! அவன் வாயைத் திறந்தால்சபையிலேசிரிப்பின் அலை குளுகுளு வென்றுபரவுகிறது. அவன் கண்களைச் சிமிட்டி ஒரு வார்த்தை சொல்லி விட்டாலோ, கொட்டகையில் ஒரே ஆரவாரம்தான்!



மிஸ்டர் பரந்த அநுபவம்


பேராசைத் தாதனாகத் தோன்றும் மிஸ்டர் பரந்த அநுபவம், முதல்தரமாய் நடிக்கிறார். அவருக்கு நடிப்புக் கலையில் பரந்த அநுபவம் இருக்கிறது என்பது அவர் ஒவ்வொரு தடவையும் மேடையில் காட்சி அளிக்கும்போதெல்லாம் வெளியாகிறது. இன்னும் ஆறுமுக முதலியார், (சேகரின் தகப்பனார்) நாகரிகப் பெண் காந்தா, சேகரின் தங்கை கனினா, காந்தாவின் தாயார் அனைவரும் திறம்பட நடித்துக் கதைக்கு மெருகு கொடுக்கிறார்கள்.

ஸீன் ஜோடனை, மின்சார வெளிச்ச ஏற்பாடுகள், காட்சிகளின் விறு விறுப்பான ஓட்டம், பின்னணிச் சங்கீதம் எல்லாம் நாடகத்தின் வெற்றிக்கு இன்றியமையாத அம்சங்களாய் அமைந்திருக்கின்றன. மொத்தத்தில் பைத்தியக்காரன் நாடகம் என். எஸ். கே. நாடக சபைக்காரர்களுக்குச் சிறந்த வெற்றியை அளித்திருக்கிறது. 108 தினங்கள் நாடகம் விடாமல் தொடர்ந்து நடந்ததிலிருந்தே இது நன்கு தெரிகிறது. போதாக் குறைக்கு வ. ரா. அவர்கள் மனதை இந்த நாடகம் வெகு வாகக் கவர்ந்திருக்கிறது என்றால் சொல்லவா வேண்டும்? ஸ்ரீ வ. ரா. அவர்கள் தினசரி இந்த நாடகத்துக்கு விஜயம் செய்துகொண்டிருந்தாராம். மேற்படி நாடகம் அவருடைய உடல் நிலைக்கு ஒரு 'டானிக்' மாதிரி இருந்ததாம்.

இத்தகைய பிரபல பைத்தியக்காரன் நாடகத்துக்கு விவசாய மந்திரி ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்களுடைய தலைமையில் வைர விழா கொண்டாடப் பட்டதில் ஆச்சரியம் இல்லை.



காந்தாவின் தாயார்



ஓர் அழகிய நங்கை

சாந்தி! டில்லியில் அரசியல் பிரவர்த்தகர், முன்னுக்கு வர ஆவல் மிகுந்த ஓர் இளைஞரின் மனைவியாகிய இவ்வடிவழகி, தனது வதன எழிலைப் பாதுகாக்க, ஆயிரக்கணக்கான நம் பெண்மணிகளைப் போல புதிய முறையாகிய பாண்ட்ஸ்ஸைக் கையாண்டு வருகிறாள்.

ப்ரேரணசக்தி பிரதிபிம்பிக்கும் கோமளவதனி, சாந்தி!

. . . . வெளியில், பூ போன்ற சருமம் பரிபூர்ண எழிலுக்கு இன்றியமையாததென சாந்தி கண்டுபிடித்துள்ளாள். பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமிலுள்ள இயற்கைத் தைலங்களால் அவள் முகத்தை சுத்தம் செய்து, மிருதுவும் பழபழப்புமாக இருக்கச் செய்கிறாள். தினம் காலை, மாலைகளில், பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் முகத்தில் பூசி, சொற்ப நேரங்கழித்து அதை மெதுவாகத் துடைத்துக் களைகிறாள். தூசு, அழுக்குமெல்லாம் அத்துடனேயே வந்து விடுகிறது. பின்பு பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவுகிறாள். அது சருமத்தினுட்சென்று, உலர்ந்துபோன இயற்கைத் தைலங்களை சருமத்திற்குத் திருப்பி அளிக்கிறது. வதனம் பூவிதழ் போன்ற மோகனகாந்தி வாய்க்கவும் செய்கிறது.

"என்ன பாங்கும் பதவிசுமாக குடித்தனம் பண்ணுகிறாள்!"





பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் — தினம் காலை, மாலைகளில் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமால் முகத்தைச் சுத்தம் செய்யுங்கள் — ஸோப்பு வேண்டாம். ஒரு இரண்டு வாரத்தில் முகாரவிந்த காந்தி மிக வாய்க்கும்.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் — கோல்ட் க்ரீமைத் துடைத்துக் களைந்ததும், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தாராளமாய்ப் பூசிக்கொள்ளுங்கள். அது உலர்ந்துபோன இயற்கைத் தைலங்களை சருமத்திற்கே திருப்பி அளித்து, வதனத்தை மிருதுவும், பளபளப்பு மாக்கிறது. அது கண்ணுக்குப் புலப்படவும் செய்யாது.

பாண்ட்ஸ் பவுடர் — பின்பு வேண்டுமானால், பாண்ட்ஸ் பவுடர் பூசிக்கொள்ளுங்கள் — உங்கள் முகச்சாயலுக்குகந்த வர்ணமாகத் தேர்ந்தெடுத்து. அது முகத்திற்கு ரோஜா மிதழ் போன்ற ஓர் மோகன காந்தி அளிக்க உதவும்.

பாண்ட்ஸ் க்ரீம்ஸ்

வியாபார விவரங்களுக்கு இவ்விலாசத்திற்கு எழுதவும்: எல். டி. ஸெய்மூர் & கோ., (இந்தியா) லிட்., பம்பாய் - கல்கத்தா - கராச்சி - சென்னை.

JWT

பம்பாயில் ரஸிகமணி

'சுபஸ்ரீ'

ரஸிகமணி ஸ்ரீ டி. கே. ஸி. அவர்களைச் சபைத் தலைவர் எங்களுக்கு அறிமுகப் படுத்தி வைத்துவிட்டு, அவருக்குப் பக்கத்தில் காலியாகக் கிடந்த நாற்காலியைச் சுட்டிக்காட்டி மீண்டும் கூறலுற்றார் :—

"அதோ, காலியாக ஒரு நாற்காலி இருக்கிறதே, அதுதான் கல்கி ஆசிரியர் அவர்களுக்காகப் போடப்பட்டது. என்ன காரணத்தினாலோ அந்த ஆசனத்தை மறுத்துவிட்டுப் பின் வரிசையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். காரணம், 'பத்திரிகை உலகில்தான் முன் வரிசையைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறோமே; இன்னும் மேடையில் கூட முன்னணியைப் பிடித்துக்கொள்ள வேண்டுமா?' என்று ஒருவேளை நினைத்தாரோ என்னமோ? கல்கியைப் பற்றி உங்களுக்கு நான் ஒன்றும் சொல்வதற்கில்லை" என்று சொல்லி விட்டுப் பல விஷயங்களைச் சொல்லத்தான் செய்தார். கடைசியாக, "சென்ற வருஷத்தில் தமிழ் நாட்டில் துரதிர்ஷ்ட வசமாக நடந்த விவாதத்தில் இவர் தன்னந் தனியாக ராஜாஜியின் பக்கம் நின்று நடத்திய போராட்டம் நீங்கள் எல்லாரும் அறிந்ததே!" என்றதும், சபையில் பிரமாதமான கரகோஷம் ஏற்பட்டது. தலைவர் அப்போது திரும்பிக் கல்கியைப் பார்த்து "பார்த்தீர்களா, மாதுங்கா தமிழர்கள் எப்படி ராஜாஜியின் பக்கம் இருக்கிறார்கள் என்பதை?" என்று சொன்னதும், சபையிலே எழுந்த பலத்த சந்தோஷ ஆரவாரத்தின் எதிரொலி அடங்குவதற்கு வெகு நேரம் பிடித்தது.

பிறகு பல அன்பர்கள் மிகவும் உற்சாகத்துடன் விருந்தினரை வரவேற்றுப் பேசினார்கள். அவர்கள் பேச்சிலே பாராட்டுகள் மழைபோல் பொழிந்தன. ஒவ்வொருவரிடமும் ஆவேசம் துள்ளிக் குதித்தது. ஒரு இளைஞர் கூறினார் :—

"வடமொழி ராமாயணம் பலராலும் ஒருமுகமாகப் 'புகழப்படுவதைக் கண்ட கம்பன் அதனைத் தேமதுரத் தமிழ் மொழியிலே ஆசை பற்றி அறையலுற்றான்! 'அக்காசில் கொற்றத்து இராமன் கதையை' வெகு காலம் தமிழுலகம் மறந்திருந்தது. 'தமிழன் வாழும் ஒவ்வொரு இடத்திலும் முழக்கப்படும்' என்ற கனவுடன் கம்பன் எழுப்பிய இதயஒலி கவனிக்கப்படாமல் இருந்தது. 'கவிஞன் கனவு' மெல்ல மெல்ல மறைந்து கொண்டே வந்தது. ஆனால் இன்று, கம்பன் மறைந்த பல வருடங்களுக்குப் பிறகு அவன் காலத்திலே நிறைவேறாத அந்த ஆசை நிறைவேறுகிறது. கம்பன் காலத்தில் கட்டப்பட்ட கலைக் கோவிலுக்கு இன்று நம் டி. கே. ஸி. சகாப்தத்திலே கும்பாபிஷேகம் நடைபெறுகிறது!"

இதைப்போல் ஸ்ரீ ஆ. சாமிநாதன், ஸ்ரீ முருகய்யா முதலிய தமிழ் இளைஞர்கள் டி. கே. ஸி. யைப் பாராட்டினார்கள்; வாழ்த்தினார்கள். ஸ்ரீ வெங்குசாமி ஒரு காவியமாகவே பேசித் தீர்த்து விட்டார். அவருடைய ஆவேசத்தில் சபையில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான ஜனங்களைப் பார்த்து, 'கோடிக் கணக்கில் இங்கே கூடியிருக்கிறீர்கள்' என்று சொல்லிப் பெரும் ஆரவாரத்தை உண்டு பண்ணினார்.

ஸ்ரீ ராகவன், "நமது ரஸிகமணி போன்றவர்கள் அளிக்கும் ஊக்கத்தினால் இன்னும் பத்து வருஷத்திற்குள் நாங்கள் தமிழுக்கு மகத்தான தொண்டு செய்து தமிழ்த் தாயைத் தங்கச் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்கப் போகிறோம்!" என்று சபதம் கூறினார்.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம் ரஸிகமணிக்கு ஒரு அழகிய வாழ்த்துப் பத்திரம் வாசித்து அளித்தது. அதை அன்புடன் பெற்றுக் கொண்டு டி. கே. ஸி. அவர்கள் உணர்ச்சி மிகுதியால் நாத் தழுதழுக்கப் பேசத் தொடங்கினார். அவர் குரலிலே வயதின் தளர்ச்சிக்குப் பதிலாக யௌவன உற்சாகம்; அவர் கண்களிலே ஒரு காம்பீர்யம்; அவர் தோற்றத்திலேயே ஒரு வசீகரம்; அலை ஓய்ந்த கடலைப் போலச் சபை நிசப்தத்தில் ஆழ்ந்து விட்டது. மந்திரத்தால் கட்டுண்டதுபோல் மயங்கிப்போன ரஸிகர்கள் அப்பெரியாரிடமிருந்து பிரவகித்த உணர்ச்சி ததும்பிய சொற் பிரவாகத்தில் மூழ்கி மெய் மறந்தார்கள்.

முதலில், தற்போது தமிழ் நாட்டில் வளர்ந்து வரும் தமிழ் அன்பையும் தமிழ் வசனப் பெருக்கையும் பற்றி விஸ்தாரமாகச் சொன்னார். பிறகு, "என்ன இருந்தாலும்

வசனம் இளைத்ததுதான். கவிதைக்கு ஈடாகாது!" என்று கூறி, தமிழ்ப் பண்போடு கூடிய உயிர்க் கவிதைக்கு உதாரணமாக இந்தப் பாட்டைச் சொன்னார்:—

"கேடா வரும்நமனைக்
  கிட்டவரா தேதூரப்
போடாஎன்(று) ஓட்டிஉன்றன்
  பொற்கமலத் தாள்நிழற்கீழ்
வாடா எனஅழைத்து
  வாழ்வித்தால் அம்ம, உனைக்
கூடாதென் றார்தடுப்பார்
  கோமதித்தாய் ஈசுவரியே"

என்று சங்கர நயினார் கோவிலில் உள்ள அம்பிகையைப் பார்த்து ஒரு பக்தர் பாடிய மேற்படி பாட்டைக் கேட்டபோது, சபையில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தமிழ்க் கவிதையின் சக்தியையும் தமிழ்ச் சொற்களின் வேகத்தையும் நன்கு உணர்ந்தார்கள். தமிழைக் கொண்டு யமனையே விரட்டி அடித்துவிடலாம் என்று கண்டார்கள்.

பின்னர், கம்ப ராமாயணத்திலுள்ள "வேதியர்தமைத் தொழும் வேந்தரைத் தொழும்" என்ற பாடலை விளக்கத்துடன் ரசிகமணி கூறியபோது, பரதனுடைய ஆனந்தத்தைக் கம்பர் ஜன்னல் வழியாகப் பார்த்ததுபோல நாங்களும் பார்த்து அநுபவித்துக் கொண்டிருந்தோம்.

சபையில் நிலவி யிருந்த கவிதா சான்னித்யம் என்னை மெய்சிலிர்க்கச் செய்தது. காற்றின் அணுக்கள்கூட ரசிகமணியின் சொல் மாரியின் உத்வேகத்திலே ஈடுபட்டு ஸ்தம்பித்துவிட்டன. சுமார் ஒரு மணி நேரம் ஒரு விநாடியிற் கழிந்து விட்டது. ரசிகமணி பேச்சை முடிக்கப் போகுந் தறுவாயில் தான் பம்பாய் வாசிகள் விழிப்படைந்தனர். உடனேயே "இன்னும் ஒரு பாட்டு!" "இன்னும் ஒரு பாட்டாவது சொல்லுங்களேன்!" என்பன போன்ற கோஷங்கள் நாலா பக்கங்களினின்றும் எழுந்தன. அதை மறுக்க முடியாமல் ஸ்ரீ டி. கே. சி. அவர்கள் தாம் களைப்படைந்து விட்டதையும் பொருட் படுத்தாமல், மீண்டும் எழுந்தார்.

"ஆழியான் ஆழி அரன் மழுத்தான் என்பார்" என்ற பாட்டை எடுத்துச் சாங்கோபாங்கமாக விளக்கி முடித்தார்.

ரசிகமணி பேசிய பிறகு, "கல்கி" ஆசிரியர் பேசினார். கல்கி பேசுவதற்கு முன்னால் அவர் ஏன் பேசவில்லை என்று எங்களில் பலருக்கு ஆத்திரமாயிருந்தது. பேசிய பிறகோ, ஏன் பேசினார் என்று ஆத்திரமா யிருந்தது. அப்படிச் சபையோர் குலுங்கச் சிரிக்கும்படி அவர் பேசி எல்லாருக்கும் வயிற்று வலியை உண்டு பண்ணி விட்டார். முதல் நாள் பம்பாய் நகரில் ஒரு டாக்ஸியில் ஏறியதையும், டிரைவர் மாதுங்காவுக்குப் போகப் பயந்து நடுங்கியதையும், திரும்பிப் போவதற்கு அவரைத் துணைக்குக் கூப்பிட்டதையும் நகைச்சுவை ததும்ப எடுத்துச் சொல்லிவிட்டு, அப்பேர்ப்பட்ட நிலைமையில் மாதுங்கா தமிழ் மக்கள் இவ்வளவு பெருந்திரளாக ரசிகமணியை வரவேற்கக் கூடியிருப்பதைப் பெரிதும் பாராட்டினார்.

கல்கி பேசி முடித்து உட்கார்ந்ததும் மக்கள் செய்த கரகோஷம் அந்தக் கட்டடத்தையே தகர்த்து விடும்போல் ஒலித்தது. அது ஒருவாறு அடங்கிய பிறகு, ஸ்ரீ டி. கே. சி. யின் நீண்ட நாள் நண்பராகிய மிஸஸ் சாஸ்திரி அவர்கள் ரசிகமணியின் தமிழ்ப் பண்பாட்டைப் பெரிதும் பாராட்டிப் பேசினார். 'இலக்கிய மதிப்பை யன்றிக் கம்ப ராமாயணத்திற்கு இசைச் சிறப்பும் உண்டு' என்று கூறி அதை நிரூபிப்பதற்காக ஒரு கம்ப ராமாயணச் செய்யுளுக்கு மெட்டமைத்துப் பாடிக் காட்டினார். ரம்மியமான அந்த மாலைப் பொழுதினிலே சாவேரி ராகத்தில் காற்றோடு மிதந்து வந்த 'தோள் கண்டார், தோளே கண்டார்...' என்னும் தித்திக்கும் கம்பராமாயண கீதம் காதில் விழுந்தபோது, "தமிழிசையைப் பரப்புவதற்குத் தமிழிலே சாகித்யங்கள் இல்லையென்று யார் சொன்னது?" என்று கேட்டுக் கொள்ளத்தான் எங்களுக்குத் தோன்றியது!

கடைசியாக, தமிழ்ச் சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ கந்தசாமி வந்தனோபசாரம் சொல்ல எழுந்து, உணர்ச்சி மிகுதியினால் நிற்க முடியாமல் நின்று, பேச முடியாமல் பேசி, யாருக்கு நன்றி சொல்வது என்று தெரியாமல் தத்தளித்து, ஒரு விதமாகக் கூட்டத்தை முடித்தார்.

மேற்கண்டவாறு ரசிகமணிக்குப் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் அளித்த வரவேற்பு வைபவத்திற்குப் பம்பாய் சர்க்காரின் விளம்பர இலாகாத் தலைவரும் நேதாஜி சர்க்காரில் மந்திரியா யிருந்தவருமான ஸ்ரீ எஸ். ஏ. ஐயர், "நேஷனல் ஸ்டாண்டர்டு" ஆசிரியர் ஸ்ரீ கே. சீனிவாசன், டாக்டர் எஸ். எஸ். கிருஷ்ணன், ஸ்ரீ ஏ. சி. ராமலிங்கம், ஸ்ரீ வி. ஜி. ராமன், ஸ்ரீ கே. எஸ். என். சர்மா, ராவ்சாகிப் என்.

என். ஐயர்; வேதாரண்ய சத்தியாக்கிரஹத்தில் 'காப்டன்' பதவி வகித்த ஸ்ரீ கே. ஏ. சுப்ரமண்யம், ஸ்ரீ எஸ். ஏ. பிள்ளை, ஸ்ரீ தேவர், "பம்பாய் கிரானிகள்" உதவி ஆசிரியர் ஸ்ரீ சிதம்பரம் முதலிய பல பிரமுகர்களும் விஜயம் செய்து சிறப்பித்ததைக் குறிப்பிட வேண்டும்.

3. மாதர் கூட்டம்

செவ்வாய்க்கிழமை 5-11-46 அன்று அதே பள்ளிக்கூட ஹாலில் ஒரு மாதர் கூட்டம் நடைபெற்றது. "ஸ்திரீகள் கூட்டமாயிற்றே; நாம் போகலாமோ, கூடாதோ?" என்று திணறிக் கொண்டிருந்தேன். ஆனால், நல்ல வேளை, 'ஆண்களுக்கும் பிரத்யேக இட வசதி உண்டு' என்று விளம்பரத்தில் கண்டதும் அடக்க வொடுக்கமாகப் போய்ச் சேர்ந்தேன்.

எதிர்பார்த்ததற்கு மேலாகத் திரளான ஸ்திரீகளும், குழந்தைகளும் ஹாலில் கூடியிருந்தனர். அவர்கள் இல்லாத மற்ற இடத்தை யெல்லாம் ஆடவர்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள். இந்த மாதர் கூட்டத்திற்கு, பம்பாயில் 'ப்ரீ பிரஸ் ஜெர்னல்' என்ற ஆங்கில தேசிய தினசரியை வெற்றிகரமாக நடத்தி வரும் ஸ்ரீமான் சதானந்தத்தின் மனைவியாரான ஸ்ரீமதி லாகாம் சதானந்தம் அவர்கள் தலைமை வகித்தார்.

வழக்கம்போலத் தமிழ்ச் சங்கத் தலைவர் ஸ்ரீ சீனிவாசய்யரின் நீண்ட முன்னுரைக்குப் பிறகு டி. கே. ஸி. யின் கம்ப ராமாயணப் பிரசங்கம் ஆரம்பமாயிற்று. சீதா கல்யாணம்! அருமையான கட்டம்!

"வல்லியை உயிர்த்தநில
மங்கை இவள்பாதம்
மெல்லிய உறைக்குமென
அஞ்சி நிலமெங்கும்
பல்லவ மலர்த்தொகை
பரப்பினள் எனத்தன்
நல்லணி மணிச்சுடர்
தவழ்ந்திட நடந்தாள்"

என்பது முதல் பாட்டு. அதாவது சீதா தேவி கல்யாண மண்டபத்துக்கு வந்த போது அவள் அணிந்திருந்த ஆபரணங்களின் ஒளி அவள் போகும் வழியை யெல்லாம் பலவர்ணப் பிரகாசத்துடன் திகழும்படி செய்தனவாம். அந்தக் காட்சியானது தன் மகளின் மெல்லிய பாதங்கள் பூமியில் பட்டால் நோகும் என்று எண்ணிப் பூமாதேவி பலவித மலர்களையும் இதழ்களையும் சீதை போகும் வழியில் பரப்பி வைத்திருந்ததுபோல் தோன்றியதாம்.

இதற்கு மேலே இன்னும் நாலு கம்பன் பாட்டுக்களைச் சொல்லிச் சீதை தன் கைவளையைத் திருத்துவதுபோல் இராமனைக் கடைக் கண்ணால் பார்த்த இடத்தில் பிரசங்கத்தை முடித்தார்.

பலகாலமாகக் கணவன்மார்களைத் தொந்தரவு படுத்தி, 'க்யூ'வில் நின்று கல்கி வாங்கி வரச் செய்து, கம்பர் தரும் காட்சியைக் கருத்துடன் படித்த பம்பாய் மாதர்கள் அசைவின்றி உட்கார்ந்து அப்படியே ரஸிகமணியின் பிரசங்கத்தை — கம்பன் கவியமுதத்தை — இன்பமுடன் பருகி ரஸித்துக் கொண்டிருந்தனர்.

பிறகு 'கல்கி' பேசினார். இந்தத் தடவையும் அவர் பேச்சின்போது ஒரே சிரிப்பாகத்தான் இருந்தது.

"ரஸிகமணியுடன் பல வருஷ காலம் நெருங்கிப் பழகியிருக்கிறேன். எத்தனையோ பிரசங்கங்கள் கேட்டிருக்கிறேன். ஆனால் இன்று வரையில் அவர் இவ்வளவு சாமர்த்தியசாலி என்று தெரிந்து கொள்ளவில்லை. பெண்களின் கூட்டத்துக்குத் தகுந்த விஷயமாக எடுத்துக் கொண்டார் பாருங்கள்! ஆரம்பத்திலேயே சீதா தேவி அணிந்திருந்த ஆடை ஆபரணங்களைப் பற்றிய வர்ணனைப் பாட்டைத் தொடங்கினார்! இதனால் இங்குள்ள சகோதரிகளின் கவனத்தை உடனே கவர்ந்துவிட்டார். (சிரிப்பு) சீதையின் ஆபரணங்களிலே கவனம் சென்றுவிட்டபடியால் பக்கத்திலுள்ள சகோதரிகளின் ஆடை ஆபரணங்களைப்பற்றிச் சிந்திக்கவோ, அவற்றைக் குறித்துப் பேசவோ இடமில்லையல்லவா? (சிரிப்பு) ஸ்திரீகளின் கூட்டம் இவ்வளவு அமைதியாகவும் இவ்வளவு சத்தம் இல்லாமலும் நடந்து நான் இது வரையில் பார்த்ததே இல்லை. ஒரு கதை சொல்வார்கள். அமெரிக்காவிலுள்ள பிரம்மாண்டமான நயாகரா அருவி விழும் சத்தம் ஒரு காத தூரம் கேட்குமாம். சில ஸ்திரீகள் மேற்படி அருவி வீழ்ச்சியைப் பார்க்கப் போனார்கள். அவர்களை அழைத்துச் சென்ற வழிகாட்டி யானவன் அருவியின் சமீபம் சென்றதும், 'பெண்மணிகளே! உங்கள் பேச்சைக் கொஞ்சம் நிறுத்தினால் நயாகராவின் சத்தம் காதில் விழும்!' என்றானாம். (சிரிப்பு.) இம்மாதிரி யெல்லாம் ஸ்திரீகளைப் பற்றி அவதூறு சொல்வது உண்டு. அதையெல்லாம் இந்த மாதர் கூட்டம் பொய்ப்படுத்திவிட்டது. (கரகோஷம்.)

இவ்வளவு பெருந்திரளான பெண்மணிகளும் குழந்தைகளும் ரஸிகமணியின் பேச்சை நிச்சப்தமாகக் கேட்டது பெரும் அதிசயம். இந்தப் பெருமை ரஸிகமணிக்கு உரியதா, கம்பனுக்குச் சேர வேண்டியதா, அல்லது பம்பாயிலுள்ள தமிழ்ப் பெண்மணிகளின் ரஸிகத் தன்மையைத்தான் பாராட்ட வேண்டுமா என்று நினைக்க வேண்டியிருக்கிறது. முதலில் இந்த மாதர் கூட்டத்துக்கு என்னைத் தலைமை வகிக்கும்படி கேட்டார்கள். அதைக் கண்டிப்பாக நான் மறுத்து விட்டேன். பெண்மணிகளும் நாரீமணிகளும் விஜயம் செய்துள்ள சபையில் ரஸிகமணி பிரசங்கம் செய்வது பொருத்தமான விஷயம் (சிரிப்பு.) நான் இந்தச் சபையில் தலைமை வகித்தால் இந்த நகரப் பத்திரிகைகளில் 'கல்கி என்னும் பெண்மணி தலைமை வகித்த'தாகப் போட்டாலும் போட்டுவிடுவார்கள். (ஏகச் சிரிப்பு). இந்தச் சபைக்கு ஸ்ரீமதி சதானந்த் தலைமை வகிப்பதுதான் மிகவும் பொருத்தமானது.

ஸ்ரீ சதானந்த் யார் என்பது உங்களில் சிலருக்குத் தெரிந்திராது. தமிழ் நாட்டின் ஆதி நாவலாகிய 'கமலாம்பாள் சரித்திரம்' முதன் முதலில் 'விவேக சிந்தாமணி' என்னும் தமிழ் நாட்டின் ஆதி சஞ்சிகையில் தொடர் கதையாக வெளியாயிற்று. அந்த 'விவேக சிந்தாமணி'யை நடத்திப் புகழ் பெற்ற ஸ்ரீ சாமிநாதய்யர் அவர்களின் புதல்வர்தான் ஸ்ரீ சதானந்த். எனவே அவருடைய மனைவியாருக்குத் தமிழில் விசேஷ அபிமானம் இருப்பதற்குக் காரணம் உண்டு. அவரை நாம் பாராட்டுவதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. ஸ்ரீ சதானந்த் நடத்தும் 'ப்ரீ பிரஸ் ஜர்னல்' பத்திரிகை சென்ற வருஷமெல்லாம் நமது தலைவர் ராஜாஜியை அதிகமாகத் தாக்கி வந்தது. 'ஏன் இப்படி?' என்று ஒரு சமயம் நான் ராஜாஜியைக் கேட்டேன். 'சதானந்த் எது வேணுமானாலும் அவர் பத்திரிகையில் எழுதட்டும். அவருடைய மனைவி நம்முடைய கட்சி. இதை சதானந்தே என்னிடம் தெரிவித்தார்!' என்று ராஜாஜி சொன்னார். (கரகோஷம்.) அப்பேர்ப்பட்ட ஸ்ரீமதி சதானந்த் இந்தத் தமிழ் மாதர் மகாநாட்டிற்குத் தலைமை வகிப்பது பற்றி நாம் பெருமைப்பட வேண்டும்!" என்று கூறி முடித்ததும் சபையில் இருந்தவர்கள் அனைவரும் ஏக குதூகலத்துடன் கை தட்டி ஆரவாரம் செய்தனர்.

பின்னர், ஸ்ரீமதி சதானந்த் தாம் 'கர்ப்யூ' பிரதேசத்தில் இருப்பதைக் காரணமாகக் கூறி, தம் பிரசங்கத்தை ரத்னச் சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

(அடுத்த இதழில் முடியும்)

காலக்ஷேபம்

இரண்டு கொடு!

கடைக்காரன் :—ஸார், இந்தப் புத்தகத்தில் ஒன்று வாங்கிவிட்டால் போதும். உலகத்திலுள்ள விஷயங்களில் பாதி தெரிந்து கொள்ளலாம்!

வாங்கவந்தவர் :—சரி! அப்படியானால் இரண்டு புத்தகங்களாகக் கொடும். உலக விஷயம் முழுவதுமே தெரிந்து கொள்ளுவோம்!

—எஸ். வி. துரைசுவாமி.

சொன்னால் சொன்னபடி!

எஜமானியம்மாள் :—என் குப்பி, இப்படிக் குப்பையே போகாமே கடுதாசை எல்லாம் அங்கங்கே போட்டுவிட்டுக் கூட்டி ஆயிற்று என்கிறாயே?

வேலைக்காரக் குப்பி :—ஏன் அம்மா, சாமானையெல்லாம் கூட்டும் போது அது அது இருந்த இடத்திலே வச்சுடணும்னு நீங்கதானே அம்மா சொன்னீங்க?

—எம். வி. ஸரோஜா.

கேள்வியும் பதிலும்

"சர்க்கரை கிடைப்பது கஷ்டமாயிருக்கிறதே, என்ன செய்வது?"

"காப்பியை நிறுத்திவிடுங்களேன்!"

"ரேஷன் அரிசி சாப்பாட்டுக்குப் போதவில்லையே!"

"ஒரு வேளைச் சாப்பாட்டை நிறுத்திவிடுங்கள்!"

"சம்பளம் போதவே இல்லை."

"அதனாலென்ன? வேலையை நிறுத்திவிட்டால் போகிறது!" —பி. சம்பத்.

சுகம் தெரிகிறதா?

டாக்டர் :—நீங்கள் என்னிடம் பதினைந்து நாளாக மருந்து சாப்பிடுகிறீர்களே, ஏதாவது சுகம் தெரிகிறதா?

நோயாளி:—தெரிகிறது! முன்னே யெல்லாம் உட்கார்ந்து கொண்டிருந்தேன். இப்போது சுகமாய்ப் படுத்துக் கொண்டிருக்கிறேன்.

—ரா. முத்துசாமி.



ன்னையில் நடைபெறும் அ. இ. ஸ்வதேசி பொருட் காட்சிசாலையில் ஹேரோடின் ஸ்டாலுக்கு விஜயம் செய்யத் தவறாதீர்கள்.

விதூஷக வீரன்



ராஜப்பா

விஜயபுரி என்னும் ஊரை வீர சிங்கன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுடைய சபையில் மகா புத்திசாலியான விதூஷகன் ஒருவன் இருந்தான். அவன் தன்னுடைய புத்தி சாதுர்யத்தினால் மிகவும் பிரசித்தியாயிருந்தான். அவனுடைய புத்திக் கூர்மைக்காக அவனை மெச்சாதவர்கள் இல்லை.

ராஜ சபையில் விதூஷகனுக்கு மிகவும் மதிப்பு இருந்தது. அரசன் அவனிடம் மிகவும் அன்பாயிருந்தான். விதூஷகன் இல்லாவிட்டால் ராஜ சபை களையில்லாமல் 'வெறிச்' சென்று இருக்கும் என்பதற்காக அரசன் விதூஷகனுக்கு ஒரு குறைவும் வைக்கவில்லை. அவனுக்குச் சகல சௌகரியங்களும் செய்து கொடுத்திருந்தான்.

அப்படியிருந்தும் விதூஷகன் மனதில் ஒரு பெரிய குறையிருந்தது. அவனுக்குத் தான் ஒரு போர் வீரனாக வேண்டும் என்று ஒரே ஆசை. யுத்த களத்தில் வீரர்கள் அணி அணியாக நடந்து செல்லும் காட்சியைப் படத்தில் விதூஷகன் பார்த்தால்கூட அவனும் ஒரு கம்பீர நடை பழக ஆரம்பித்து விடுவான். போர் வீரன் ஆவதில் அவனுக்கு அவ்வளவு ஆசை.



ஒரு நாளைக்கு விதூஷகன் அரசனிடம் சென்று, "மகாராஜா எத்தனை நாளைக்கு இந்த மாதிரி சோம்பேறிப் பிழைப்புப் பிழைக்கிறது? எனக்கும் வாள் வீசிச் சண்டை போட ஆசையாயிருக்கிறது. நீங்கள் என் மீது கருணை வைத்து எனக்கு ஒரு போர் வீரன் உத்தியோகம் கொடுக்க வேண்டும்!" என்று மிகவும் கெஞ்சிக் கேட்டான்.

அரசனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை.

"நீ போர் வீரனாவதற்குத் தகுதியற்றவன். உனக்கு முதலில் கத்தி பிடிக்கத் தெரியுமா? சுத்த அசடாயிருக்கிறாயே!" என்றான்.

"இல்லை, மகாராஜா! நீங்கள் எனக்கு அந்த உத்தியோகத்தைக் கொடுங்கள். அப்புறம் நீங்களே பாருங்கள்!" என்று ஒரே பிடிவாதமாகக் கெஞ்சினான் விதூஷகன்.

அரசனும் அவன் தொந்தரவு தாங்க முடியாமல் அவனுக்கு ஒரு போர் வீரன் உத்தியோகம் கொடுத்தான்.

விதூஷகனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உடனே அவன் போர் வீரனின் உடைகளை அணிந்து இங்கும் அங்கும் நடந்து திரிந்தான். ஒவ்வொரு நாளும் அரண்மனையை இரண்டு போர்வீரர்கள் காவல் காப்பது வழக்கம். ஒரு நாள் விதூஷகனுடைய முறை வந்தது.

விதூஷகனால் காவல் காக்க முடியவில்லை. அவனுக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றியது. அவன் என்ன செய்வான், பாவம்! அயர்ந்து தூங்கி

பூச்செண்டின் உபயோகம்!



கூட்டத்துக்குத் தலைமை வகித்த



அக்கிராசனர் நமக்குக் கொடுக்கப்பட்ட



புஷ்பச் செண்டுக்குச் சரியான உப
யோகம் கண்டு விடுக்கிறார்!

விட்டான். விதூஷகன் சரியாக வேலை பார்க்கிறானா என்று இரவில் அரசன் வந்து பார்த்தான். இவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட அரசன், விதூஷகனிடம் இருந்த கத்தியை மட்டும் உறையிலிருந்து உருவிக் கொண்டு போய்விட்டான்.

விடிந்ததும், விதூஷகன் தன் உடைவாளைப் பார்த்தான். கத்தியைக் காணாமல் மிகவும் வருந்தினான். உடனே அவனுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. அவன் அந்தக் கத்திக்குப் பதிலாக மரத்தால் வேறொரு கத்தி செய்து அதை அந்த உறைக்குள் போட்டு விட்டான். கத்தி முழுவதையும் எடுத்தால் தானே மரக் கத்தி என்பது தெரியும்? இது நல்ல யோசனையல்லவா? பிறகு ஒன்றுமே தெரியாதவன் போல நடந்து கொண்டான்.

* * *

அரசன் மறுநாள் சபைக்கு வந்தான். அரசனுக்கு விதூஷகன் முதல் நாள் இரவு காவல் காக்கும் பொழுது தூங்கிவிட்டதைச் சபையில் வெளிப்படுத்த ஆவலாய் இருந்தது. உடனே அரசன் திடீரென்று ஒரு வீரன் மேல் கோபித்துக் கொள்வதாகப் பாவனை செய்தான். பிறகு அவன் விதூஷக வீரனைப் பார்த்து, "உன்னுடைய கத்தியால் இவன் தலையை வெட்டி வீழ்த்திவிடு" என்று கட்டளையிட்டான்.

அரசன் அப்படிக் கூறியதும் விதூஷகனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சற்று யோசித்தான். பிறகு பலமாகச் சபை முழுவதும் கேட்கும்படி "கடவுளே! உனக்குக் கண் கிடையாதா? இவனோ எந்தவிதமான குற்றமும் செய்யாதவன். இவனை வெட்டுவதற்கு நான்தானா அகப்பட்டேன்? நீ இருப்பது உண்மையானால், என்னுடைய கத்தி மரக்கத்தியாக மாறவேண்டும்" என்று பிரார்த்தனை செய்து கொண்டே வாளை உருவினான். அவனுடைய கத்தி மரக்கத்தியாக இருப்பதைக் கண்டு அங்குள்ளோர் அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். விதூஷகனின் புத்தியை மெச்சி அரசன் அவனை மன்னித்து விட்டதோடு, பரிசுகளும் கொடுத்தான்.



304: "கள்ளக் கணக்கு எழுதற
கார்வார் பிள்ளை மேலே
சாடறது."

மீனாக்ஷி: "சிவனேன்னு லீவு
எழுதிப்போட்டுட்டு ஒரு மாசம் 'ரஷ்ட்'
எடுத்துக்குங்கோ."
சாஸ்திரி: "சிவனேன்னு லீவு
போட்டுட்டா, 'கோவிந்தா'ன்னு
வேலை போயிடும்."





திருடன் முத்தையன்:
"என்ன சத்தம் அது?

இடது பக்கம் இருப்பவர்; வேலாயுத
ஆசாரி; வம்பர் மஹாசபைத்தலைவர்.
வலது பக்கம் இருப்பவர்;
சௌந்திர பாண்டியன்;
உபதலைவர்....



புது டில்லியில் தமிழ் நாடகம்

இன்னும் சில விவரங்கள்

★ ○ ★

திருச்சி தேசியக் கல்லூரியின் உதவிக்காகப் புது டில்லியில் "கன்வனின் காதலி" நாடகம் நடந்தது பற்றிச் சென்ற இதழில் நேயர்கள் படித்திருப்பார்கள். நாடகம் நடத்துவதற்காக ஏற்பட்ட கமிட்டியின் ஆர்கனைசர் ஸ்ரீ டி. ராமையா அவர்கள் அனுப்பியுள்ள அறிக்கையில் பின்வரும் விவரங்கள் காணப்படுகின்றன:

ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்தும் இரண்டு தினங்களும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். முக்கியமாக ஸ்திரீகளும் குழந்தைகளும் அதிகமாக வந்திருந்ததைக் குறித்து ராஜாஜி தமது தலைமை உரையில் மிகவும் பாராட்டிப் பேசினர்.

நாடகத்துக்கு விஜயம் செய்த பிரமுகர்களில் முக்கியமானவர்கள்:—ஸ்ரீ தேவதாஸ் காந்தி, டாக்டர் ஸர் அளகப்ப செட்டியார், ஸ்ரீ வெள்ளிங்கிரிக் கவுண்டர், ஸ்ரீ ராமலிங்கம் செட்டியார், ஸ்ரீ குருசாமி.

நாடகக் கமிட்டிக்கு ஆதரவளித்த டில்லி பிரமுகர்கள்:—ராவ்பகதூர் குப்புசாமி முதலியார், ஸ்ரீ ஜயசங்கர், ஸ்ரீ பி.எம். சுந்தரம், ஸ்ரீ ஏ. வி. ஒய். நாராயணன், ஸ்ரீ டி. ஜி. அனந்தசாமி.

நாடகத்தை வெற்றிகரமாக நடத்தி வைக்கும் விஷயத்தில் பெரிதும் உதவியளித்தவர்கள்:—சௌத் இண்டியன் போர்டிங் ஹவுஸ் முதலாளி ஸ்ரீ பி. கே. நாராயணய்யர், ஸ்ரீ கே. ராமமூர்த்தி, ஸ்ரீ என். ராமமூர்த்தி, ஸ்ரீ ஜே பாலன் ஆகியவர்கள்.

நாடகத்திற்கு ரூ. 25ம் அதற்குமேலும் நன்கொடை யளித்தவர்கள்:—

டாக்டர் ஸர் அழகப்ப செட்டியார் ரூ. 501. ராவ்பகதூர் வி. குப்புசாமி முதலியார் ரூ. 50. ஸ்ரீ எஸ். ஜயசங்கர் ரூ. 50. ஸ்ரீ பி. எம். சுந்தரம். ரூ. 50. ஸ்ரீ ஏ. வி. ஒய். நாராயணன், ரூ. 50. ஸ்ரீ டி. ஜி. அனந்தசாமி ரூ. 50. ஸ்ரீ வி. எஸ். சுந்தரம், ஸி. ஐ. இ. ரூ. 25. ராவ்சாஹிப் ஆர். கே. லக்ஷ்மணன் ரூ. 25. மேஜர் பி.என். கிருஷ்ணமூர்த்தி ரூ. 25. ஸ்ரீ டி.எஸ். சுப்ரமண்யம் ரூ. 25. ஸ்ரீ பி. கே. நாராயணய்யர் ரூ. 25. ஸ்ரீ வி. வி. ராமகிருஷ்ணன். ரூ. 25. ஸ்ரீ கே. ஸ்ரீனிவாஸன் ரூ. 25. ஸ்ரீ கே. பி. நாயுடு, பிரதம மந்திரி, டேவாஸ் (ஸீனியர்), ரூ.25. ஸ்ரீ அம்பலவாணன் செட்டியார், மட்டான்சேரி, கொச்சி ரூ. 25. ஸ்ரீ எல். ராமச்சந்திரன், ஆனா. மதராஸ் ரூ. 25. ஸ்ரீ வி. பி. கருணாகரன் நம்பியார் ரூ. 25. ஸ்ரீ சண்முகம் செட்டியார் ரூ. 25. ஸ்ரீ எஸ். சுப்ரமணியம். ரூ. 25. ஸ்ரீ என். சுந்தரம் ரூ. 25. ஸ்ரீ ஏ. எஸ். செட்டியார் ரூ. 25. ஸ்ரீமதி என். பாலகிருஷ்ணன் ரூ. 25. ஸ்ரீமதி பி. எம். சுந்தரம் ரூ. 25. ஸ்ரீமதி பி. கே. நாராயணய்யர் ரூ. 25. ஸ்ரீமதி டி. ராமையா ரூ. 25.

மேலே குறிப்பிட்டவர்கள் அனைவருக்கும் நாடகத்தின் பூரண வெற்றிக்குக் காரணமாயிருந்த 'சப்புடு' முதலான நடிகர்களுக்கும் ஆர்கனைஸர் ஸ்ரீ டி. ராமையா தமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார். அவர்களோடு ஸ்ரீ டி. ராமய்யாவுக்கும் சேர்த்து நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

★

புது டில்லியிலிருந்து கிடைத்த மற்றொரு விவரத்திலிருந்து, "கன்வனின் காதலி" நாடகம் நடந்ததன் காரணமாகக் "கலாமந்திரம்" என்று ஒரு புதிய ஸ்தாபனம் ஜனனமாகியிருப்பதாகத் தெரிய வருகிறது. மேற்படி நாடகத்தில் நடித்த பிரதான நடிகர்கள்தான் இந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். சீக்கிரத்தில் வேறு சில நாடகங்களும் "கலாமந்திர"த்தார் நடத்துவார்கள் என்று தெரிகிறது. புது டில்லி "கலாமந்திர"த்துக்கு நமது மனப் பூர்வமான வாழ்த்துக்கள்.

★

"கன்வனின் காதலி" நாடகத்தில் நடித்த சில பிரதான பாத்திரங்களைப் படம் பிடித்து ஸ்ரீ கே. நடராஜன் எம். ஏ. நமக்கு அனுப்பி வைத்திருக்கிறார். மேற்படி படங்களை எதிர்ப் பக்கத்தில் காணலாம். ஸ்ரீ நடராஜனுக்கு நமது விசேஷ வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



அன்றொரு நாள்

கு. கு.

"இன்று நாடகத்துக்குப் போக வரமா?" என்று ஆரம்பித்தாள் மாலினி.

"என்ன நாடகம்?"

"அன்றொரு நாள்!"

"அன்றொரு நாள்? நாம் கூட அதை நடித்தோம் போலிருக்கிறதே!"

"நம் நாடகந்தான் தினமும் இருக்கிறதே! நானும் ஒருத்தி வெட்கமில்லாமல் கேட்க வருகிறேனே உங்களையும்..." என்று சொல்லிக்கொண்டே முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விட்டாள். அவள் போய் விட்டாலும் எங்களுடைய அன்றைய 'நாடகத்தின்' முடிவு அல்ல அது. ஆரம்பந்தான்!

மாலினி என் வாழ்க்கைத் துணைவியாக வந்ததே ஒரு தனி நாடகம். அன்றொரு நாள் இரவு எட்டு மணி இருக்கலாம். ஆபீஸில் நெடுநேரம் வேலை செய்து அசந்து போனதால் வீட்டிற்குப் போய் அக்கடா வென்று படுக்கலாம் என்ற ஒரே நினைவுடன் வந்து கொண்டிருந்தேன். முனிசிபல் பார்க்குக்குச் சமீபமாக வந்ததும் திடீரென்று கலகலவென்ற ஒரு சிரிப்பொலி கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினேன். மெய் சிலிர்த்தது. பாதையில் யாருமே இல்லை. செய்வது இன்னதென்று அறியாதவனாய், ஓசை வரும் வழியே மெய்ம்மறந்து நடந்தேன்.

ஆனால், அங்கே...? உயிர் இருந்தது; உடலைக் காண முடியவில்லை! சம்பாஷணை தொடர்ந்து நடந்து சற்று நேரத்திற்கெல்லாம் பூர்த்தியாகி முடிந்தது. நான் கேட்டது ரேடியோவில் ஒரு நாடகம். கதாநாயகியின் குரல்தான் என்னை அவ்வளவு பரவசப் படுத்தியது!

அவள் குரலொலி குழலொலியாகக் கிளம்பி, இன்னிசை வெள்ளமாகப் பெருக்கெடுத்து வந்து, வறண்டு கிடந்த என் வாழ்க்கைப் பாலைவனத்தில் அமுதப் பிரவாகமாகப் பாய்ந்தது. அதன் இன்ப அலைகளில் திளைத்து மிதந்தேன்.

மறுதினமே, எனக்கு மகிழ்ச்சி விருந்து வழங்கிய வானொலி நிலயத்தாருக்கு ஒரு பாராட்டுக் கடிதம் வரைந்தேன். அந்தப் பெண்ணுக்கும் ஒரு கடிதம் நாருக்காக எழுதினேன். அன்றைய தினமே என் வீட்டில் ஒரு ரேடியோ செட்டிற்கும் ஏற்பாடு செய்தேன். அது முதல், ஒவ்வொரு நாளும் என் அறையின் ஏகாந்தத்தில் அவளும் நானும் மட்டும் இருப்பது போன்ற உணர்வுடன் அவள் குரலின்பத்தைக் கேட்டு, பூரணமாக அனுபவித்து, மதுரமான மயக்கத்தில் ஆழ்ந்து மகிழ்ந்திருப்பேன்.

இதற்கிடையில் அவளிடமிருந்து பதிலும் வந்தது. அழகான எழுத்துக்கள். ரஞ்சிதமான மணிமாலைதான்! சின்னஞ் சிறு வாக்கியங்கள். ரத்தினச் சுருக்கமான வாக்கிய அமைப்பு. நாலே வரிகள். எனினும் அதை நாற்பதாயிரம் தடவை படித்திருப்பேன்!

இன்பமயமான இரவு நேரத்தில், அமைதியாக அமர்ந்தபடி, கண்களை மூடிக்கொண்டு அவள் சம்பாஷணைகளைச் செவியுற்று, அதன் தித்திப்பைச் சுவைக்கும்போது, என் கற்பனையுலகில் ஒரு அழகிய வடிவமும் வந்து ஆனந்தக் காட்சியளிக்கும். அவ்வளவு கவர்ச்சியான குரலையுடையவள், கண்ணுக்கும் விருந்தளிக்கும் வனப்புடைய காரிகையாகத்தானே இருக்க வேண்டும்? — என்றது அவள் நினைவுக்கு அடிமைப்பட்ட என் நெஞ்சம்!

காலம் கழிகிறது. நாளுக்கு நாள் எங்களுக்கிடையே கடிதப் போக்கு வரத்தும் அதிகரிக்கவே எங்கள் உள்ளத்தின் உவகை ஓடும் திசையிலேயே நாங்களும் மிதந்து சென்று, ஒருவரை யொருவர் அன்னியோன்னியமாக அறிந்து கொண்டோம்.

அவள் பத்தாவது வரையில் படித்திருக்கிறாள். சங்கீதப் பயிற்சியும் உண்டு. விதவையான அவள் தாயாரைத் தவிர வேறு யாரும் நெருங்கிய பந்துக்கள் இல்லை. தற்போது அவளுடைய சம்பாத்தியமே அவர்களுடைய சம்ரக்ஷணைக்கு ஆகிறது. அடுத்த தைமாத இறுதியில் உலகமறிய அவள் கையைப் பிடிக்க உத்தேசித்தேன். அவளுக்கும் என் கருத்தை அறிவித்தேன். அவள் அன்னையும் எங்கள் கலியாணத்துக்கு முழுமனதுடன் ஆசியளிக்க முன் வந்தாள். எல்லாம் கடிதமூலமாகத்தான்!

தையும் பிறந்தது. அவளிருப்பிடம் சென்றேன். வீட்டு வாசலிலேயே அவள் வந்து என்னை வரவேற்றாள். ஆனால்,......

* * *

"என்ன அபார யோசனை? எந்தக் கோட்டையைப் பிடிக்கத் திட்டம் போடுகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே மாலினி காப்பியைக் கொண்டு வந்து வைத்து விட்டு, "காப்பி ஆறிப் போகிறது, சாப்பிடுங்களேன், எனக்கும் வேலையிருக்கிறது" என்றாள்.

"அதிருக்கட்டும். அன்றொரு நாள் நான் முதன் முதலாக உங்கள் வீட்டுக்கு வந்து உன்னைச் சந்தித்தபோது ...." என்று சொல்ல ஆரம்பித்தபோதே என் குரல் தழுதழுத்தது.

"அப்பொழுது என்னவாம்?"

"என்னைப் பார்த்ததும்.......நீ.........என்ன நினைத்தாய்?"

"அதெல்லாம் எதற்கு இப்பொழுது...?"

"சொல்லு, பாதகமில்லை!"

"உங்களைக் கண்டதும் திக்பிரமையினால் கைகால் ஓடவில்லை. வாயும் அடைத்து விட்டது. எனக்கு ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை. நான் கண்டது கனவா நனவா என்றுகூட அறியக்கூடாமல் மயங்கினேன். ஏனெனில் உங்கள் கடிதங்களின் மூலமாக நான் என் மனதில் எந்த மாதிரி தங்களைக் கற்பனை செய்து கொண்டிருந்தேனோ கிட்டத்தட்ட அதேபோல நீங்கள் என்முன் தோன்றியதும் என்னையே என்னால் நம்பக்கூடவில்லை. பேசினால் என் கனவு கலைந்துவிடுமோ என்றுகூட பயந்தேன். என் கற்பனையே உருவெடுத்து வந்த உங்களை என் காதல் கணவனாக அடைய அவ்வளவு அதிர்ஷ்டக்காரியாகி விட்டேனா என்றெல்லாம் யோசித்தேன். இந்த மன நிலையில் உங்களை 'வாருங்கள்' என்றுகூட வரவேற்கவில்லை. இதற்கிடையில் உங்கள் முகத்தைக் கவனித்தேன். சற்று வாட்ட முற்றதுபோல் இருந்தது. பாவம்! வந்த இடத்தில்—வா—என்றுகூடச் சொல்லவில்லையே என்று நீங்கள் என்ன நினைத்துக்கொள்வீர்களோ—என்று அங்கலாய்த்துக்கொண்டு 'வாருங்கள்' என்ற விதத்தில் ஏதோ உளறினேன். அதன் பிறகுதான் உங்கள் முகமும் சரியாயிற்று."

"நீ வேறு ஒன்றுமே நினைக்கவில்லையா?"

"அதெல்லாம் இப்பொழுது எதற்கு? நீங்கள் உள்ளே வந்த பிறகுகூட உங்கள் முகம் அவ்வளவாகச் சரியாக இல்லை. கடிதத்தில் ஒவ்வொரு தடவையும் எவ்வளவோ ஆர்வமுடன் எழுதியிருந்தீர்கள். எதிரில் வந்ததும் சம்பிரதாய வார்த்தைகள்கூடத் தயக்கத்துடன்தான் வந்தது. என்றாலும் நான் பேசும்போதுமட்டும் உங்கள் முகம் மலர்ந்தது. ஆனால் நான் பேச்சை நிறுத்தியவுடன் மீண்டும் உங்கள் முகம் கூம்பிவிடும். அதன் பிறகுதான்........."

"பிறகு என்ன?" என்றேன் ஆவேசத்துடன்.

"நிலைமை எனக்குத் தெளிவாயிற்று. உங்கள் அழகிய உருவத்திற்கு முன்னால் என் கரிய நிறமும் அவலக்ஷண உருவமும்......."

"மாலினி! இதெல்லாம்........." என்று சொன்னேனே யொழிய அப்போது அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்கத் தைரியமில்லை.

"என் குறைபாடுகளைப் பற்றி அது காறும் நான் சிந்தித்ததே யில்லை. ஆனால் உங்கள் முகபாவத்தில் எல்லாம் பட்டவர்த்தனமாகப் பிரதிபலித்ததுபோல இருந்தது.

நீங்கள் முதல் முதல் எழுதிய கடிதத்தின் நினைவும் வந்தது. என்னை நீங்கள் காதலிப்பதெல்லாம் என் குரலினால் ஆகர்ஷிக்கப்பட்டுத்தான் — என்ற பச்சையான உண்மை என் தோற்றத்தைப் பழித்துப் பரிகசித்தது. "என் இன்னிசைக் குயிலி" என்று நீங்கள் அடிக்கடி அருமையாக அழைத்த நினைவுகூட வந்து அந்த உண்மையையே வலியுறுத்தியது. அப்படியானால் உங்கள் முகத்திலேயே விழிக்காமல் எங்கேயாவது ஓடிப்போய்விடலாமா? அது எப்படி சாத்தியம்? எனவே, என் கனவுகளெல்லாம், நான் கட்டிய கோட்டைகளெல்லாம் இடிந்து பாழாகத்தான் வேண்டுமா?......... என்றெல்லாம் ஏங்கினேன். உடனே என் சுயநலமும், என் பெண்மையின் தாபமும் சேர்ந்து, சதி செய்து,— அவர் உன்னைக் காதலித்தது உன் அழகிய குரலுக்காகத்தானே? அந்தக் குரலின் இனிமை இன்னும் இம்மியளவும் மாறவில்லை. வீணான கவலைகளை யொழி. மற்றதை யெல்லாம் மறந்துவிடு. இப்பொழுது உன் குரலின் வீணையை மீட்டு; அவர் இதயத்தைத் தொட்டு அள்ளும்படியான மதுரமான நாதத்தை எழுப்பு. அதைரியப்படாதே. கைக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை இழக்காதே. இல்லாவிட்டால், வாழ்நாள் முழுதும்...... என்று என்னை எச்சரித்தது."

சற்று பெருமூச்சு விட்டாள். அவள் இதயம் பட படவென்று அடித்துக் கொண்டது. மார்பு விம்மியது.

"அப்புறம்?" என்றேன்.

"அப்புறம் என்ன? உங்களைப் பேச விடாமல் நானே ஏதேதோ பேசிக் கொண்டே இருந்தேன். நீங்களும் உங்கள் விழிகளால் என்னை விழுங்கிக் கொண்டிருந்தீர்கள். பிறகு......! நீங்கள்தான் அப்பாவியாச்சே! அதற்குப் பிறகு நடந்ததெல்லாம் கூடச் சொல்லவேணுமா? அதிருக்கட்டும். நீங்கள் என்ன நினைத்தீர்கள்?"

"நான் என்ன நினைத்தேன்? நான் வேறு எதுவும் நினைப்பதற்கு எங்கே அவகாசம் அளித்தாய்?"

"பொய் சொல்ல வேண்டாம்! சும்மா சொல்லுங்கள். நான் கருப்பாக இருக்கிறேனென்று...நீங்கள்...கொஞ்சம்...?"

"இதென்ன அசட்டுக் கேள்வி! நான் தான் ஆரம்பத்திலேயே உன்னை 'என் குயில்' என்று அழைத்தேனே! குயில் என்ன மயில் போலவா இருக்கும்? அல்லது பஞ்ச வர்ணக் கிளி போலத்தான் இருக்குமோ? என்னதான் இருந்தாலும் உன் கருப்பிலும் ஒரு கவர்ச்சி யில்லையா?"

"போதும் உங்கள் சாகசம்! உண்மையைச் சொல்லுங்கள்."

"நீ கருப்பு என்றால் அழகில்லை என்று நீயாக ஏன் நினைத்துக் கொள்கிறாய்?" என்று அவள் கண்ணாடிக் கன்னத்தைக் கிள்ளினேன். அதோடு "நான் என்றுமே உன் நிறத்தைப் பற்றிக் கவலைப்படவேயில்லை. மேலும் ஜெகன்மாதா பார்வதியின் நிறம் என்ன—கரும் பச்சைதானே? குமரன் காதலித்த குறமகள் மட்டும் சிவப்போ? என்னதான் ஒருத்தி செக்கச் சிவந்த மேனியுடையவளாயிருந்தாலும் அவள் அகன்ற விழிகளுக்கு அழகு ஊட்டுவது அதன் கரிய நிறந்தானே?"

* * *

மேலுக்கு நான் இப்படிக் கூறினாலும் என் குற்றமுள்ள நெஞ்சு குறு குறுத்தது. உண்மையில் அன்று அவளைக் கண்ட மாத்திரத்தில் எனக்கு ஒரு பெரிய சோதனையாகவே இருந்தது. குரலின் இனிமைக்காக மட்டும் இந்த அவலக்ஷண உருவத்தை என் ஆயுட்கால முழுதும் பார்த்துக்கொண்டு, என் வாழ்க்கையில் சம பங்கு எடுத்துக்கொள்ள உரிமையை யளிப்பதா?—என்ற கேள்வியே என் மனதில் போராட்டத்தை விளைவித்தது. எனினும் சற்று நேரத்திற்குத்தான். பல மாத காலமாகக் கடிதங்களின் மூலமாய் நான் அன்னியோன்னியமாகத் தெரிந்துகொண்டிருந்தவளின் நினைவு வந்தது. உருவ அழகில்லாவிட்டாலும் அழகிய உள்ளம் படைத்தவள்......இது போன்ற நினைவுகள் வந்தன. அத்துடன் அவள் இன்னிசை மதுவையும் உண்ட மயக்கத்தில் அவள் கரிய வடிவம் என் கண்களுக்கு மறைந்துவிட்டது. பிறகு எனக்கு நாத வடிவாகத்தான் தோற்றமளித்தாள். ஏமாற்றமடைந்த நினைவும் அகன்றது. உள்ளத்தில் மகிழ்ச்சி நிறைந்து ததும்பியது. குயிலின் இசை விருந்தில் லயப்பட்டவர்கள் அதன் கரிய வர்ணத்தைக் காண்பதுண்டா? மனப்பூர்வமாக அவள் கைகளைப் பிடித்தேன். பிறகு எங்கள் வாழ்க்கை பறந்து சென்றது.

"'அன்றொருநாள்' நாடகம் முடிந்து விட்டதல்லவா?" என்றேன்.

என் குயிலி, மகிழ்ச்சியினால் மலர்ந்த தன் திரு முகத்தை என் பக்கம் திருப்பினாள்.

காலி வீடு

ஸ்ரீதரம் குருஸ்வாமி

திருச்சியில் கூட நிலைமை இப்படித்தான்; குடியிருக்க வீடு கிடைப்பதில்லை, என்று தெரியும். என் நண்பன் கூட எழுதியிருந்தான். இருந்தாலும், நம் ஒருவருக்கு இடம் எவ்வளவு வேண்டும், அது கிடைக்காமல் போய்விடுமா என்று எண்ணினேன்.

திருச்சி மலைக்கோட்டை மீது வீடு கிடைத்தால் அது எவ்வளவு பெரிய பாக்கியம்! அதிலும் மலைக்கோட்டையில் வடக்குத் தெருவாகவும் இருந்து அந்த வடக்குத் தெருவின் வட சரகாகவும் இருந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

சுவர்க்க வாசம் என்றால் சுவர்க்கவாசம் தான்! 'மொட்டை' மாடி வீடு. மாடிக்குப் போவதற்குப் படிகள்கூடக் கிடையாது. ஆனால், மாடி எதற்கு? கூடத்து ஜன்னலை முழுவதும் திறந்துவிட்டால் காற்று 'விர்' என்று உள்ளே வரும். ஆண்டார் வீதியைத் தாண்டிச் சற்றுத் தூரம் பார்த்தால் வயலும் தோப்புந்தான். அப்புறம் காவிரி! காவிரிப் பாலம், ஸ்ரீரங்கத் தீவு. அடர்ந்த பசுஞ்சோலைகளுக்கு நடுவே திருவானைக்கா, ஸ்ரீரங்க, ஆலயக் கோபுரங்கள். அடிவானத்தைத் தொட்டு நிற்கும் மலைகள். வெகு தூரத்தில் ரத்தின கிரீசர் குன்று. ஜன்னலில் முழங்கையை ஊன்றிக்கொண்டு, மணிக் கணக்காகப் பார்த்துக்கொண்டே நிற்பேன். வேறு விளையாட்டோ, பொழுது போக்கோ, தேவையில்லை. நீங்கள் அனுபவித்துப் பார்த்தீர்களானால்தான் அந்தச் சுகம் உங்களுக்குத் தெரியும்.

என்னுடைய பத்தாவது வயதில் இந்தச் சுகத்தை நான் அனுபவித்திருக்கிறேன். மேலே பதினேழு வருஷம் ஆகிவிட்டது; வாஸ்தவம்! மற்றவர்கள் ஆனால் சொப்பனத்தில் பார்த்ததுபோல் நினைவிருக்கிறது என்பார்கள். யாருக்கும் அத்தனைக் காலத்திற்குள் எல்லாம் எப்படியோ மறந்து போய்விடும். நான் அதை ஒரு நாள்கூட மறந்ததில்லை. என் தகப்பனாருக்குத் தென்னிந்திய ரெயில்வேயில்தான் வேலை. ஊதியம் குறைவு.

ஆனால் அப்போது, கிழக்கு வங்காள — அஸ்ஸாம் ரெயில்வேக்கு ஆட்கள் வேண்டும். அங்கே அதிகச் சம்பளம் தருவார்கள் என்று செய்தி வந்தது. கடைசித்தர குமாஸ்தாவுக்குக்கூட அஸ்ஸாமில் எழுபத்தைந்து ரூபாயில் ஆரம்பிப்பார்கள். பத்து வருஷ ஆபீசு அனுபவம் இருந்தால், என்று கேள்விப்பட்டதும் என் தகப்பனார் மனுச் செய்துகொண்டார். தென்னிந்திய ரெயில்வே அதிகாரிகள் மூலமாகவே மனு போயிற்று. இரண்டு மாதத்தில் பதிலும் வந்தது. தூரதேசமானால் என்ன? வருஷத்தில் இரண்டு மூன்று தடவை வந்து போக வேண்டுமானாலும் 'பாஸ்' உண்டு. ரெயில் வேலையில் அது ஒரு சௌகரியம். ஆகவே அவருக்குச் சம்பளம் நூற்றிருபதில் ஆரம்பம் என்று உத்தரவு வந்ததும் ஒப்புக்கொண்டுவிட்டார்.

சிட்டகாங் போய்ச் சேர்ந்தோம். என் தகப்பனாருக்குச் சம்பள உயர்வு மேலும் மேலும் கிடைத்தது. ஆனாலும் அந்தப் பிரதேசம் அவருக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அடிக்கடி நோய் காரணமாக ஓய்வு எடுத்துக்கொண்டார். என்னையும் என் தாயையும் அங்கேயே விட்டுவிட்டு அவர் மாத்திரம் இந்த ஊர்ப் பக்கம் சேர்ந்தாற்போல் இரண்டு மூன்று மாதம் வந்து தங்கி விட்டுத் திரும்புவார். அப்புறம் கல்கத்தாவிற்கே மாற்றல் ஆயிற்று. அதற்குள் சிட்டகாங்கிலேயே என் தாய் கண்ணை மூடிவிட்டாள். கல்கத்தாவுக்கு வந்ததும் என் தகப்பனார் காலமும் முடிவடைந்து விட்டது. கல்கத்தாவில் மெட்ரிகுலேஷன் தேறி நான் அங்கேயே ஒரு குமாஸ்தா வேலை சம்பாதித்துக் கொண்டேன். கல்கத்தாவில் சில ஆங்கிலப் பத்திரிகைகள் தென்னிந்தியர் நிர்வாகத்தில் திறமையாக நடந்து வருவது உங்களுக்குத் தெரியும். அவற்றுள் ஒன்றில் எனக்கு நல்ல சம்பளம் கொடுத்தார்கள். இருந்தாலும், எனக்கு என் ஊருக்குத் திரும்பவேண்டும் என்ற ஆவல் அதிகரித்தது. இங்கே உள்ள ரெயில்வே அதிகாரிகளுக்கு மனுச் செய்தேன். என் தகப்பனார் செய்த சேவையையும் குறிப்பிட்டு அவ

ருடைய உத்தியோக சம்பந்தமான பத்திரங்களையும் நகல் செய்து அனுப்பினேன். உடனே வேலைக்கு உத்தரவும் கிடைத்தது. அவ்வளவு விரைவில் நான் அதை எதிர்பார்க்கவில்லை. எனவே உத்தரவு வந்ததும் நண்பர்களுடன் சொல்லிக்கொண்டு, புறப்படத் தயார் ஆனேன்.

ஆகஸ்ட் பதினாறு வந்தது. இன்னும் இரண்டு தினங்களில் நான் பிரயாணமாகலாம் என்று இருந்தேன். பதினைந்தாம் தேதி இரவு வெகு நேரம் ஆபிஸில் வேலை செய்தோம். பதினாறாம் தேதி காலை எங்கள் தெரு வழியாகப் பிரம்மாண்டமான கூட்டம் ஒன்று போயிற்று. மணி பதினொன்று. முதலில் சாதாரண ஊர்வலம் போல் தோன்றியது. வீட்டிலும், ஆபீசு மேலும் கற்கள் வந்து விழ ஆரம்பித்த பிறகுதான் நிலைமை தெரிந்தது. வெளிப் பக்கம் உள்ள பெரிய வாசலை இழுத்துப் பூட்டினோம். கூட்டம் வருவது நிற்கவில்லை. எப்படியோ இரும்புக் கம்பியாலான பெரிய வெளி வாசற் கதவை உடைத்துக் கொண்டு கூட்டத்தின் ஒரு பகுதி உள்ளே நுழைந்தது. ஆபீசுக் கார்கள் மூன்றும் தீக்கு இரையாயின. நெருப்பு ஆபீசு கட்டிடத்திலும் பிடித்துக் கொண்டது.

நெருப்பணைக்கும் வண்டி தற்செயலாக வந்தது; அதிகச் சேதம் இல்லாமல் தப்பினோம். வழியில் நாங்கள் கண்ட காட்சிகளை நினைத்தாலும் பகீர் என்கிறது. கல்கத்தா அப்போது சுடுகாடு ஆயிற்று. யமதர்மராஜன் எங்களுக்காக இனி நரகத்தில் காட்டக்கூடிய விஸ்தாரமான சித்திரவதைக் காட்சிகள் எதுவும் பாக்கி இல்லை. ஏதோ அதிர்ஷ்ட வசத்தால் தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று.

அன்றைய ரயிலிலேயே நான் புறப்பட்டு விட்டேன். நான் வந்த பிறகு நிலைமை இன்னும் கோரமாகி இருக்க வேண்டும்.

திருச்சி ஜங்ஷனுக்குக் காலையில் வந்து சேர்ந்தேன். ஜங்ஷன் அருகிலுள்ள ஹோட்டல் ஒன்றில் என் பெட்டி படுக்கைகளை வைத்துவிட்டு ஸ்நானம் செய்து சாப்பிட்டேன். பஸ் ஏறித் தெப்பக் குளம் வந்து இறங்கினேன். ஓட்டமும் நடையுமாக மலைக் கோட்டைப் பக்கம் விரைந்தேன்.


தெரு வழியாகப் பழைய வீட்டைப் பார்த்துக்கொண்டே போவோம் என்று பிரதட்சிணமாகச் சுற்றி வந்தேன். அந்த வீட்டில் இப்போது யார் இருக்கிறார்களோ? ஒருவேளை வீட்டை இடித்து வேறுவிதமாகவோ, விஸ்தாரமாகவோ கட்டியிருந்தாலும் கட்டி இருக்கலாம். எந்த வீட்டிலிருந்தும் நாம் அந்தக் காட்சியைக் காணலாம். மலைக் கோவில் பிராகாரத்திலிருந்து கூடத் தான். என்றாலும் நான் இருந்த அதே வீட்டில் இருந்து பார்த்தால் அதில் தனி ஆனந்தம் அல்லவா?

வீடு பூட்டியிருந்தது! திண்ணையிலிருந்த குப்பையைப் பார்த்ததும் வெகு நாளாக ஒருவரும் அதில் குடியிருக்கவில்லை என்று தோன்றியது. எதிர்த்த வீட்டில் இருந்த அம்மாள் என்னைக் கவனித்தாள். நான் "இந்த வீடு காலியா?" என்று அவளைக் கேட்டேன். "ஆமாம்" என்றாள்.

"சொந்தக்காரர் யார்? இதற்குச் சாவி யாரிடம் இருக்கிறது?" என்றேன்.

ஆண்டார் தெருவில் பாங்கர் ஒருவர் பெயரைச் சொன்னாள். நான் 'சரி' என்று சொல்லிப் புறப்பட்டேன்.

இவ்வளவு இட நெருக்கடியில் வீடு ஒன்று காலியிருப்பது எனக்கு ஆச்



நாரத விஜயம்



"பூலோகத்திலே ஏதோ கலகம் நடக்கிறதாமே? அதெப்படி நாம் இல்லாமல் கலகம் நடக்கும்?" என்று பார்க்கிறதற்காக நாரதர் அவசரமாய்ப் பூமியில் இறங்குகிறார்.

சரியமாயிருந்தது. நான் விசாரித்துச் சாவியை வாங்கிக்கொண்டு வந்தேன். பாங்கர் வெளியே போயிருப்பதாகவும் சற்று நேரத்தில் வந்து விடுவார் என்றும் சொன்னார்கள்.

காலி வீட்டைத் திறந்து கொண்டு நாம் போனால், தெருவில் இருப்பவர்கள் இரண்டு மூன்று பேர்கூட உள்ளே நுழைவதுண்டு. ஒருவரும் அப்படி எனக்குப் பின்னால் வரவில்லை.

உள்ளே தூசி கிளம்பி மென்னியை அடைத்தது. ஒட்டடை முகத்தில் சுற்றிக் கொண்டது. கும்மிருட்டு எதிர்ப் புறமெல்லாம். கண்ணை மூடிக்கொண்டு கையை எதிரில் நீட்டித் தடவி நடந்தேன். பழக்கமான இடத்தில் ஜன்னல் இருந்தது. ஜன்னலைத் திறந்தேன். 'கிரீச்' என்ற சத்தத்தோடு ஜன்னல் திறந்தது. ஏதோ முகத்தில் விழுந்தது. இரவு நேரமாக இருந்தால் பயந்திருப்பேன். சே! வௌவால்! புகைக் கூண்டைப் பார்த்து அந்த வௌவால் மேலே ஓடிப் போயிற்று.

ஜன்னலின் நான்கு கதவுகளையும் திறந்து விட்டேன். என்ன பிரகாசம்! யாரோ தடதட வென்று பின்னால் ஓடி வந்தது தெரிந்தது. திரும்பிப் பார்த்தேன். ஒருவரும் காணோம். கூடத்து உள் பக்கம் 'ச்சொத்' என்று சத்தம் கேட்டது. அந்தப் பக்கம் கவனித்தேன். அறைக் கதவும் பூட்டியிருந்தது. யாரோ என்னைச் சுற்றிச் சுற்றி இரண்டு தடவை நடந்தாற்போல் ஒரு பிரமை! அவ்வளவுதான். அப்புறம் ஒன்றுமில்லை. சரிதான்! பேய் நடமாடும் இடம் என்று யாரும் இந்த வீட்டை நெருங்கவில்லை! அதுதான் காரணம். இயற்கையிலேயே பயந்த சுபாவம் உள்ள எனக்கு மாத்திரம் ஒரு விதத்திலும் ஏனோ அச்சம் உண்டாகவில்லை. ஜன்னலில் படிந்திருந்த தூசியை ஊதிவிட்டு, அப்படியே காவிரியையும் சோலையையும் கவனிப்பதில் ஈடுபட்டேன். கோயில் கோபுரங்கள் அந்தப் பசும் வெள்ளத்தில் மிதப்பது போல் தோன்றின. என் உள்ளத்தில் ஏதோ திரும்பப் புகுந்தது. ஒரு நிறைவு, ஒரு சாந்தி பிறந்தது.

சாவியை மறுபடியும் கொண்டுபோன போது பாங்கர் இருந்தார்.

"என்ன, வீட்டைப் பார்த்தீரா?" என்று கேட்டார்.

"பார்த்தேன்."

"அப்படிச் சொன்னால்?"

"வீட்டைப் பார்த்தேன். வேறு என்ன? வெகு நாளாகப் பூட்டிக் கிடந்திருப்பதாகத் தெரிகிறது!" என்றேன்.

"வேறு ஒன்றும் நீர் பார்க்கவில்லையா? என்னிடம் எதையோ நீர் ஒளிக்கிறீர்."

"வீட்டிற்கு என்ன வாடகை? நான் ஒன்றையும் ஒளிக்கவில்லை. சொல்லுங்கள்" என்றேன் உறுதியாக.

"வாடகை என்ன? விலைக்குக் கேட்டாலும் தருகிறேன். கொள்ளை மலிவாக! வாங்கிக் கொள்கிறீரா?" என்றார்.

அவர் என்னைப் பார்த்த பார்வை விநோதமாக இருந்தது.

உடனே என் கல்கத்தா அனுபவம் நினைவுக்கு வந்தது. என் தகப்பனார் வைத்த பணம் முழுவதும் என் கையில் இருந்திருந்தால், "சரி, வாங்கிக் கொள்கிறேன்" என்று தயங்காமல் சொல்லி யிருப்பேன். இப்போதோ அதில் பாதி எனக்கு நஷ்டமாகி விட்டது.

"இப்போதுதான் வீடுகளுக்கு ஏகக் கிராக்கி ஆயிற்றே விலையெல்லாம் ஒன்றுக்கு நாலாக இருக்குமே எனக்குக் கட்டுமா?" என்றேன்.

"உமக்குக் கட்டும்படியான விலையைச் சொல்லும். சாசனம் செய்து தருகிறேன்" என்றார் பாங்கர்.

"வீட்டில் விவகாரம் வில்லங்கம் ஒன்றும் கிடையாதே?"

பாங்கர் தம்முடைய அறையிலிருந்து ஹால் பக்கம் எட்டிப் பார்த்தார். பெட்டியடியில் உட்கார்ந்திருந்த குமாஸ்தா ஜாடையைத் தெரிந்து கொண்டார். பீரோவைத் திறந்து ஒரு கட்டு தஸ்தவேஜிகளைக் கொண்டுவந்து கொடுத்தார்.

பாங்கர் சொன்னார்: "வில்லங்கம் ஒன்றும் கிடையாது. அதற்கு நான் ஜவாப்தாரி. எந்த வருஷம்?—ஆமாம். '931 ல் இந்த வீட்டை வாங்கினேன். அதற்கப்புறம் இரண்டொரு வருஷம் நாலைந்து பேர் குடியிருந்து பார்த்தார்கள். எல்லாம் சில நாட்கள்தான். அதற்கப்புறம் பூட்டியே கிடக்கிறது."

நான் வேகமாகக் கணக்குப் போட்டுப் பார்த்தேன். மூவாயிரத்துச் சொச்சம் கையில் இருந்தது. வீடு அவ்வளவும் பெறும். இருந்தாலும் ஏதோ கேட்டுப் பார்ப்போம் என்று தோன்றியது.

"என் கையில் வீடு வாங்கப் போதுமான அவ்வளவு பணம் கிடையாது."

"வாங்கிக் கொள்வது உண்மையானால் சரி. கையில் எவ்வளவு இருக்கிறது? அதைச் சொல்லும்."

"ஆயிரத்திருநூறு, எல்லாம் சேர்த்து!"

"பத்திரம், ரிஜிஸ்தர் செலவு, இதற்கெல்லாம் இருநூறு வைத்துக் கொள்ளும். ஆயிரத்துக்குச் சாசனம் செய்து தருகிறேன்."

"நிச்சயம் தானா?"

"நிச்சயம்தான். சொன்ன வார்த்தை நான் தவறினதில்லை. ஆனால், உண்மையாகவே, வீட்டில் நீர் ஒன்றும் பார்க்கவில்லையா?" என்று கேட்டார்.

"வீட்டைப் பார்த்தேன். அவ்வளவுதான். வேறு என்ன இருக்கிறது, பார்ப்பதற்கு?" பேய் என்ற வதந்தியைப் பற்றி அவராகவே சொல்லட்டுமே என்பது என் எண்ணம். அதைப் பற்றி எனக்குக் கவலை தோன்றவில்லை.

"நீர் பார்த்தால் சாதுவாக இருக்கிறீர். வீட்டில் நுழைந்த உடன் உம்மோடு கூட யாராவது நுழைந்தார்களா?"

"நீங்களே சொல்லுங்கள், மேலே."

"பிறர் சொல்வதை நம்பாமல் நேரில் போய் நானே பார்த்திருக்கிறேன். ஒரு தடவை இரண்டு தடவை அல்ல."

"என்ன அது?"

"ஒரு பையன். பத்துப் பனிரண்டு வயது உள்ளவனாகத்தான் தோன்றுகிறான். எங்கள் பின்னாடியே ஓடிவருகிறான். புஸ்தகம் சிலேட்டைத் 'தொப்' பென்று போடுகிறான்."

"அப்புறம்?"

"ஜன்னலண்டை போய் வெறித்துப் பார்த்துக்கொண்டு நிற்கிறான்...சொல்லி விட்டேன். உமக்குப் பாதகமில்லையா?"

"சொன்ன மட்டும் சந்தோஷம். வீட்டைச் சுத்தம் செய்வதற்கு யாரேனும் உங்கள் ஆட்களை என்னோடு அனுப்புங்கள். சாவியை நானே வைத்துக் கொள்ளட்டுமா?"

"பிறகு நீர் வருத்தப்படக் கூடாது. அப்படி ஓடிவரும் பையனைப் பார்த்தால் உமக்கு என்னவோ வேதனை செய்யும். இரண்டு நிமிஷம் கண்ணில் படுவான் அப்புறம்......"

"இனிமேல் அந்தப் பையன் வரமாட்டான்! ஆட்களைக் கையோடு அனுப்பி வையுங்கள். நான் முதலில் போகிறேன்.

அந்தப் பையன் நான்தான்!"



யசோதரா

ஆசிரியர்: விச்வம்பரநாத் கௌசிக்

மொழி பெயர்ப்பு: ரா. வீழிநாதன்

"இனிமேல் எப்பொழுது பார்க்கப் போகிறோமோ? அடிக்கடி இவ்விடத்து க்ஷேம சமாசாரங்களுக்குக் கடிதமாவது எழுதிக் கொண்டிருங்கள்!" என்று ராமநாத பாபுவிடமும் சியாமநாத பாபுவிடமும் சந்தாராம் சொன்னான்.

ராமநாத பாபு வாய் திறக்கவில்லை. சியாமநாத பாபு, "அதற்கென்ன, கடிதப் போக்கு வரத்து இல்லாமலா இருக்கப் போகிறது?...அதிருக்கட்டும், பெண்ணுக்கு எப்பொழுது கல்யாணம் செய்யப் போகிறாய்?" என்று கேட்டார்.

"வரன் தேடிக் கொண்டிருக்கிறோம். சீக்கிரமே நடத்து விடலாம் என்று நினைக்கிறேன்."

இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, வாசலில் வண்டி வந்து நின்றது. சியாமநாதபாபு தம் பிள்ளையைப் பார்த்து, "ஸ்டேஷன் வரைக்கும் போய் விட்டு வா!" என்றார்.

ராமநாத பாபு, அவர் சொல்வதற்கு முன்பிருந்தே, 'ஸ்டேஷனுக்குப் போவதா, வேண்டாமா?' என்பதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தார். "ஸ்டேஷன் வரை போய் விட்டுத்தான் வருவோமே!" என்று முதலில் எண்ணினார். ஆனால் அவருடைய மனம் அதற்குத் துணியவில்லை. அவர் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பே, "அவர் ஏன் வீணாகச் சிரமப்பட வேண்டும்? வேண்டாம்!" என்றான் சந்தாராம்.

"சிரமம் என்ன, அதெல்லாம் ஒன்றுமில்லை!" என்றார் ராமநாத பாபு.

"இந்த வெய்யிலில் நீங்கள் வந்து கஷ்டப் படுவானேன்? வேண்டாம், சொல்வதைக் கேளுங்கள்!" என்றான் சந்தாராம்.

ராமநாத பாபு, "நான் வருகிறேன் என்கிறேன். இவன்தான் வேண்டாம் என்கிறான். அதற்குத்தான் நான் என்ன செய்வது?" என்று தன் மனத்துக்கு ஆறுதல் அளித்துக் கொள்ளலானார்.

யசோதரா எல்லாரிடமும் விடை பெற்றுக்கொண்டு ராமநாத பாபுவின் மனைவியிடம் வந்தாள். கண்களில் நீர் ததும்ப, "இந்த ஏழையை மறந்து விடாதே, அம்மா! நான் ஊருக்குப் போய் வருகிறேன்" என்றாள்.

"உன்னை மறப்பதா? சாந்தி முகூர்த்தத்தன்று என்னை நீ என்ன பாடு படுத்தி வைத்தாய்? அதையெல்லாம் நான் மறக்க முடியுமா, ஜஸ்லோ!" என்று அவள் புன்முறுவலுடன் யசோதராவின் காதோடு காதாகச் சொன்னாள்.

"ஆமாம், என் வாழ்விலும் அந்த ஒரு நாள்தான் மறக்க முடியாத நாள்!" என்று சந்தோஷமும் துயரமும் ஒருங்கே சேரப் பதில் அளித்துவிட்டு, யசோதரா புறப்பட்டாள்.

வண்டியில் ஏற்றி விடுவதற்கு யசோதராவுடன் சம்பாவதி வாசல் வரை வந்தாள். ராமநாத பாபு வாசற்புறத்து ஒட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்த சம்பாவதி, "என் அண்ணா, நீ ஸ்டேஷனுக்குப் போகவில்லையா?" என்று கேட்டாள்.

ராமநாத பாபு, "நான் போகத் தயாராகத் தான் இருந்தேன். சந்தாராம்தான் 'வேண்

டாம்' என்று சொல்லி விட்டான்!" என்று சற்று உரக்கவே சொன்னார்.

"அவன் என்ன சொன்னாலும் நீ போகாமல் இருப்பது நன்றாயிராது!" என்றாள் சம்பாவதி.

ராமநாத பாபுவின் முகம் பதற்றமுற்றது. அதே சமயம் வண்டியில் உட்கார்ந்திருந்த யசோதரா, தலையைச் சிறிது வெளியே நீட்டிப் பார்த்தாள். ராமநாத பாபுவின் கண்களும் அவளை நோக்கின. யசோதராவின் முகத்தில் துயரம் தோய்ந்த ஒரு சிறு புன்முறுவல் படர்ந்தது. ராமநாத பாபுவினால் அந்தப் பார்வையைச் சகிக்க முடியவில்லை. குற்றவாளியைப் போலத் தலை குனிந்து கொண்டார்.

வண்டியும் நகர்ந்து விட்டது.

• • •



யசோதரா ரயில் வண்டியில் உட்கார்ந்தாள். அவளுடைய கண்கள், ராமநாத பாபு ஸ்டேஷனுக்கு வரவில்லை என்பதையறிந்திருந்தும், தன்னையும் மறந்து 'அவர் வந்திருக்கிறாரா' என்று பிளாட்பாரத்தின் ஒவ்வொரு சிறு கும்பலிலும் தேட ஆரம்பித்தன. முன் தடவை வந்த பொழுது அவர் இங்கே தானே நின்று கொண்டிருந்தார்! என்று எண்ணி, அந்த இடத்தில் தன் பார்வையைச் செலுத்தினாள். அவரில்லாத அந்த பிளாட்பாரம் அவளுக்கு 'வெறிச்' சென்று தோன்றியது. இருந்தாலும் வைத்த கண் வாங்காமல், அந்த இடத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்.

வண்டியும் ஊதியவாறே புறப்பட்டது. அவள் கண் இமை கொட்டாமல், அதே இடத்தை நோக்கிக் கொண்டிருந்தாள். பிளாட்பாரம் மறைந்தும், அவள் தன் பார்வையைத் திருப்பவில்லை. அவளது கண்களுக்கு முன்னிலையில், பழைய சம்பவங்கள் ஒவ்வொன்றாக, இருப்புப் பாதைக்கருகே ஓடும் தந்திக் கம்பங்கள் ஒவ்வொன்றாக ஓடி மறைவது போல ஓடி மறைந்தன. தன்னுடைய முந்திய வாழ்வு அவளுக்கு ஒரு கனவாகத் தோன்றியது. ஆகா! அந்தக் கனவில் தான் என்ன சுகம்! என்ன இனிமை! ஆனால் அந்தக் கனவுக்குப் பிறகு இந்த விழிப்பு எதற்கு? ஓடும் ரெயில் வண்டிக்குள்ளிருந்து தோன்றும் வெளிக் காட்சியைப் போல, இந்த உலகம் அநித்தியமானது, விரைவில் மாறிவிடக் கூடியது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகவா? கான்பூர் ஒவ்வொரு கணமும் தூர விலகிப் போய்க் கொண்டே இருந்தது.

அத்துடன் கூடவே, யசோதராவின் உன்னத்து ஆசைகள், ஆவல்கள், உலக பாசம், வாழ்வு மோகம், தன் நம்பிக்கை எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக மறையலாயின. கான்பூரில் உள்ள மில்களின் ஆகாயத்தை அளாவும் புகைப் போக்கிகளும் கூட மறைந்து விட்டன. அவற்றிலிருந்து எழுந்து ஆகாயத்தில் நீந்திக் கொண்டிருந்த புகை, 'இங்கேதான் கான்பூர்



இருக்கிறது' என்பதைத் தெரிவித்துக் கொண்டிருந்தது.

"அதோ புகை தெரிகிறதே, அதுதான் கான்பூரா? அங்கேதான் என் தெய்வம் ராமநாத பாபு இருக்கிறாரா? என் தெய்வமா? அதெப்படி? 'தன் தெய்வம்' என்று உரிமை பாராட்டத்தான் ஒருத்தி வந்து விட்டாளே! எப்படி யிருந்தால் என்ன! அவர்கள் சுகமாயிருந்தால் சரி. அட, இதென்ன இது! புகைகூட மறைந்து விட்டதே! மறைந்தால் மறைந்துவிட்டுப் போகட்டுமே! எல்லாம் ஒரே பிரமை! பிரமையா? இந்தப் புகை, கான்பூர், ராமநாத பாபு இவர்கள் எல்லாம் பிரமையா! சீ! பைத்தியம் மாதிரி இல்லாத தெல்லாம் யோசிக்கிறேனே! ராமநாத பாபுவும் பிரமையா!...அவர்தான் என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறாரே! அவரை எப்படி பிரமையாக எண்ணுவது? கான்பூரை மறந்து விடலாம். உலகத்தையே வேண்டு மானாலும் மறந்து விடலாம்! ஆனால் ராமநாத பாபுவை மறக்க முடியுமா? அவரை மறக்க முடிந்தால்...! வண்டியில் உட்கார்ந்து கொண்டு நான் அவரை எட்டிப் பார்த்த பொழுது, திண்ணையில் நின்று கொண்டிருந்த அவர், என்னைப் பார்த்து விட்டுத் தலையைக் குனிந்து கொண்டு விட்டாரே! ஏன்?...அவர்தான் என்னை மறக்க முயலுகிறாரே! மறக்க வேண்டியது தானே! என்னை மறந்து அவர் நிம்மதியா யிருக்க முடியுமானால் எனக்குச் சந்தோஷமே!...என்ன இருந்தாலும் ஸ்டேஷனுக்கு வராமல் இருந்தது எனக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை;...ஆமாம், நான் அவருக்கு என்ன சொந்தம்? எதற்காக அவர் கொண்டுவந்துவிட வரவேண்டும்?........எப்படியாவது அவர் சுகமாயிருந்தால் சரி."

இம்மாதிரி எண்ணிய யசோதராவின் கண்களில் கண்ணீர் சுரந்தது. "இதென்ன இது? மறுபடியும் என் இதயம் பலவீன முறுகிறது? அவர் ஞாபகம் மறுபடியும் எனக்கு வருவானேன்!...அவருக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? மனதை வேறு விஷயத்தில் திருப்ப வேண்டும்!.........பாட்டி என்னை எதிர் பார்த்துக் கொண்டிருப்பாள். என்னைப் பார்த்தால், அவளுக்கு எவ்வளவு சந்தோஷம், தெரியுமா? கல்யாணத்தைப் பற்றி விசாரிப்பாள். 'எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லு கல்யாணம் எப்படி நடந்தது?' என்று கேட்பாள். நான் எப்படி எல்லாவற்றையும் விவரமாகச் சொல்ல முடியும்?......அந்தப் பழைய விஷயங்கள் எல்லாம் நினைவுக்கு வந்து விட்டால்?...அதையெல்லாம் இந்த வாழ்நாளில் இனி மறப்பது என்பது எப்படி?...... அன்று சாந்திக் கல்யாணத் தன்று...அது மறக்கக் கூடிய விஷயமா? அன்று நான்தானே அவளைச் சிங்காரித்து விட்டேன்!...... அன்று ராமநாத பாபு அவளைப் பார்த்து பிரமித்துப் போயிருப்பார். 'யார் இப்படிச்

சிங்காரித்திருப்பார்கள் ?' என்பது அவருக்கு எங்கே தெரிந்திருக்கப் போகிறது?......அவளும் சொல்லியிருக்க மாட்டாள். எப்படிச் சொல்லுவாள்! வெட்கமாயிராதா?......பாவம், அவன் ரொம்ப நல்லவன்; என்னிடம் ரொம்ப அன்பாக நடந்து கொண்டான். எப்படியாவது, அவள் சுகமாக வாழ்க்கை நடத்தினால் சரி......ராமநாத பாபு, அவளுடைய அன்பு வலையில் சிக்கியபின் எல்லாவற்றையுமே மறந்து விடுவார்'' என்று எண்ணினான்.

வண்டி அடுத்த ஸ்டேஷனில் நின்றது. யசோதரா திடுக்கிட்டு விட்டாள். "ஒரு ஸ்டேஷன் தாண்டி வந்து விட்டோம்" என்றான் நந்தராம்.

"அப்படியா? இங்கிருந்து கான்பூர் எவ்வளவு தூரம்?'' என்று கேட்டாள் யசோதரா.

"ஏழெட்டு மைல் இருக்கும்" என்றான் நந்தராம்.

யசோதரா, மனத்துள் "ஏழெட்டு மைல் தானா இருக்கும்? என்னவோ எண்ணூறு மைல் வந்துவிட்டது போல் அல்லவா தோன்றுகிறது!'' என்று எண்ணிக்கொண்டாள். இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் வண்டி புறப்பட்டது. யசோதராவும் யோசனையில் ஆழ்ந்தாள்.

31

மூன்று வருஷங்கள் சென்று விட்டன. ராமநாதபாபு வக்கீல் தொழில் புரிய ஆரம்பித்து விட்டார். அவருக்கு இரண்டு வயதில் ஒரு பிள்ளைக் குழந்தையும் இருந்தது. அவருக்குக் கல்யாணம் ஆன அடுத்த வருஷமே சம்பாவதிக்கும் கல்யாணம் ஆகி விட்டது. அவள் தன் புக்ககத்துக்குக் கூடச் சென்று விட்டாள். ராமநாத பாபுவின் வீட்டிலிருந்து அழைப்பிதழ் அனுப்பப்படாமையால், நந்தராமின் வீட்டிலிருந்து, அவளுடைய கல்யாணத்துக்கு ஒருவருமே செல்லவில்லை. ராமநாத பாபுவின் கல்யாணமாகி இரண்டு மூன்று மாதத்திற்கெல்லாம் கடிதத் தொடர்பு அறுந்துவிட்டது. ராமநாத பாபு நந்தராமின் இரண்டு மூன்று கடிதங்களுக்குப் பதில் எழுதாமல் அசிரத்தையாக இருந்து விட்டதுதான் அதற்கு முக்கிய காரணம்.

நந்தராமின் குடும்பத்திலும் அதற்குப் பிறகு அநேக துயர சம்பவங்கள் நடந்து விட்டன. ராமநாத பாபுவுக்குக் கல்யாணம் ஆன அடுத்த வருஷமே, நந்தராமின் தந்தை டாகுர் அர்ஜுன்சிங் இறந்து விட்டார். யசோதராவுக்குக் கல்யாணம் செய்து வைத்து விடவேண்டும் என்று அவர் வெகு பாடுபட்டார். ஆனால் அவருடைய சில விரோதிகள் நந்தராமின் பழைய வாழ்க்கைச் சம்பவங்களைக் கூறிக் கல்யாணம் நடக்க வொட்டாமல் தடுத்து வந்தனர். எவ்வளவு முயற்சி செய்தும் பலனில்லை. தந்தை - தனயன் இருவருடைய மனமும் இந்த அவச் சொல்லின் காரணமாக மிகக் கிலேசமுற்றது. ஆனால் சிறிதும் யசோதரா இதற்காக வருத்தமுறவில்லை. அவள் வாழ் நாளை முழுவதும் கன்னிப் பெண்ணாகவே கழித்து விடுவதெனத் தன் மனத்தில் முடிவு கட்டிக் கொண்டிருந்தாள். தந்தைக்கும் தனயனுக்கும் அவமானமாகப் பட்ட அதே விஷயம், யசோதராவுக்கு தெய்வானுகூலமாகத் தோன்றியது. கௌரவம் வாய்ந்த குடும்பஸ்தரான அர்ஜுன்சிங் இந்த அவமானத்தினால் மனம் உருகி, படுத்த படுக்கையாகி விட்டார். சில காலத்திற்கெல்லாம் உலகையே வெறுத்துக் கண்களையும் மூடி விட்டார்.

தந்தை இறந்த பிறகு, நந்தராம், ஒரு ஏழை டாகுரின் பிள்ளைக்கு, ஒரு கிராமத்தையே வரதட்சிணையாகத் தருவதாக வாக்களித்து, யசோதராவைக் கல்யாணம் செய்து வைத்து விடலாம் என முயற்சித்தான். ஆனால் யசோதரா தான் கல்யாணம் செய்து கொள்ள முடியவே முடியாது என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள். நந்தராம் எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்கவில்லை. 'கல்யாணம் பலவந்தப் படுத்திச் செய்து வைத்தால் உயிரையே விட்டு விடுவேன்' என்றும் தயக்கமின்றித் தன் தந்தையிடம் சொல்லி விட்டாள். நந்தராம் வேறு வழியின்றிக் கல்யாணப் பேச்சையே நிறுத்தி விட்டான். அவளுடைய தாயாரும், 'யசோதராவுக்குக் கல்யாணம் ஆகாதா, ஆகாதா' என்று இலவு காத்த கிளிபோல இரண்டு வருஷங்கள் காத்திருந்து விட்டுக் கடைசியில் மனம் வெதும்பித் தன் உயிரை விட்டாள்.

தந்தை-மகள் இருவருடைய வாழ்க்கையும் மன அமைதி யின்றியே ஓடலாயிற்று. நந்தராம் பகல் பூராவும் வாசற்புறத்து அறையொன்றில் உட்கார்ந்து கொண்டு, ஏதாவது சிந்தித்தவாறு பித்தனைப்போல்

பொழுதைப் போக்குவான். யசோதரா உள்புறத்து அறை யொன்றில் படுத்துக் கிடப்பாள். சுந்தராமின் வீட்டுக்கு, அவனுடைய இரண்டொரு ஆப்த நண்பர்கள், சிலபுலன்களைக் கவனித்துக் கொள்ளும் சில கணக்குப் பிள்ளைகள் இவர்களைத் தவிர வேறு யாருமே வருவதில்லை. இவர்கள் வரும்பொழுதெல்லாம், தன் மனத் துயரத்தை மறக்க எண்ணிச் சிறிது நேரம் சுந்தராம் பேச்சுக் கொடுப்பது உண்டு. ஆனால் இரவு வேளைகளில் துயரம் அனைத்தும் ஒருங்கே கூடி அவனைக் கண் கொட்ட விடுவதில்லை.

யசோதரா இரவு பகல் எப்பொழுது பார்த்தாலும் தனிமையாகவே இருப்பாள். வீட்டில் வேலை செய்யும் இரண்டொரு வேலைக்காரிகளைத் தவிர அவனுடைய வீட்டுக்கு எவருமே வருவதில்லை. பார்க்கப் போனால் ஒரு விதத்தில் அவர்கள் சாதிக் கட்டுப்பாடு செய்து வைத்திருந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். 'இந்த சுந்தராம் ஸோனுவை இழுத்துக் கொண்டு ஓடினான்! அவளைக் கல்யாணம் செய்து கொண்டிருப்பானோ, அல்லது கல்யாணம் செய்து கொள்ளாமல்தான் வைத்துக் கொண்டானோ? யார் கண்டது? அவன் 'இந்த ஊரில் இன்னார் வீட்டில் கல்யாணம் செய்து கொண்டேன். இவ்வளவு வருஷம் அங்கே இருந்தேன்' என்று தான் சொல்கிறான். இருந்தாலும் அவனுடைய வார்த்தையில் நம்பிக்கை ஏற்பட மாட்டேன் என்கிறதே! நம்பிக்கை எப்படி ஏற்படும்? ஒருவருக்கும் தெரியாமல் குடும்பப்பெண் ஒத்தியைத் திருட்டுத்தனமாக இழுத்துக் கொண்டு ஓடிப்போன இந்த துர் நடத்தைக் காரனின் பேச்சில் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்? அவனுடைய அப்பா - அம்மா மனம் என்ன பதறித்து! இவ்வளவு நெஞ்சழுத்தம் உள்ளவன் பேச்சை நம்புவதா! முடியவே முடியாது... ஆமாம். இந்தப் பெண்ணை எவன் கல்யாணம் செய்து கொள்வான்?' என்று இவ்வாறு தங்களுக்குள் மறைமுகமாகப் பேசிக் கொள்வார்கள். அவனைப் பற்றி இந்த மாதிரியான எண்ணம் கொண்டிருந்ததனால் அந்தக் கிராமத்து ஸ்திரீகள், அவன் வீட்டுக்குப் போகத் துணிவதே இல்லை.

(தொடரும்)

நல்ல சமாசாரம்!

ராஜம்மா

ஆபீஸிலிருந்து களைப்புடன் வீடு திரும்பிய கணேசன் உடைகளைக் களைந்து விட்டு ஆயாசத்துடன் நாற்காலியில் சாய்ந்து கொண்டான். காப்பி டம்ளருடன் அழகாக நடந்து வந்தாள் சீதா. அவ்வளவு அடக்கமாகத் தனக்குப் பணிவிடை செய்வது, ஏதோ ஒரு புடவைக்கோ நகைக்கோ தன்னிடம் அஸ்திவாரம் போடத்தான் என்று நடைமுறையில் கண்டிருந்த கணேசன், சற்று யோசனையுடனே காப்பியைச் சாப்பிட்டான்.

''உங்களுக்கு ஒரு சமாசாரம் தெரியுமோ?'' என்று குறும்புப் பார்வையுடன் கேட்டாள் அவனுடைய மனைவி சீதா.

''சமாசாரத்தைச் சொன்னால்தானே தெரியும்!'' என்றான் கணேசன்.

''சரி; சொல்லுகிறேன். நம்மாத்திலே இப்போ எத்தனை பேர் இருக்கிறோம், சொல்லுங்கள்!'' என்றாள் சீதா.

''இது ஒரு சமாசாரமா? என், உனக்குத் தெரியாதோ? நீ ஒன்று. நான் ஒன்று. ஒன்றும் ஒன்றும் இரண்டு!'' என்றான் கணேசன்.

''இனிமேல் நம்மாத்திலே மூன்று பேர்கள்!'' என்றாள் சீதா.

கணேசன் ஆச்சரியத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு சந்தோஷத்துடன் சீதாவைப் பார்த்தான்.

''நிஜமாகவா, சீதா?''

''நான் என்ன, பொய்யா சொல்லுகிறேன்?''

''இத்தனை நாட்களாக என்னிடம் சொல்லவே இல்லையே!'' என்றான் கணேசன் அன்பும் உணர்ச்சியும் பொங்கிய குரலில்.

''நீங்களாகத் தெரிந்து கொள்வீர்களாக்கும் என்று இருந்தேன்!'' என்றாள் சீதா.

கணேசன் முகத்தில் ஆனந்தம் பொங்கியது. நான் தந்தையாகப் போகிறோம் என்ற நினைப்பில் பூரித்துப் போனான். ''ஆமாம், நான் ஒரு பெரிய முட்டாள். இதுவரையில் நான் இந்தச் சமாசாரம் தெரியாமலே இருந்திருக்கேன் பாரு. நீ சொன்னதற்கு அப்புறம் தான் எனக்குத் தெரியும்! அது சரி, நம்ம குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம், சொல்லு!'' என்று கேட்டான் கணேசன்.

சீதாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ''என்ன! என்ன! குழந்தையா? எந்தக் குழந்தையைச் சொல்லுகிறீர்கள்?'' என்று திகைப்புடன் கேட்டாள்.

''என்ன சீதா, விளையாடுகிறாயே! உனக்குப் பிறக்கப் போகிறதே அந்தக் குழந்தைக்குத் தான் என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டேன்!'' என்றான் கணேசன்.

''இதென்ன கூத்து! ஏதாவது கனாக் கண்டேளா? ஒன்றுமே புரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்களே!''

''பின்னே, நீ இப்போது யாரைப் பற்றி இத்தனை நாழிகை பேசிக் கொண்டிருந்தாய், சீதா?''

''நன்னா இருக்கிறது. போங்கள்! அம்மா கடிதாக எழுதியிருக்கிறாள். இன்றைக்குப் புறப்பட்டு நாளைக்கு வரப் போகிறாள். அதை அல்லவா சொன்னேன்?'' என்றாள் சீதா.

''ரொம்ப அழகுதான், போ!'' என்று முகத்தைச் சுளித்தான் கணேசன்.

படித்துப் பார்!

கவலைக்கு மருந்து

[ஆசிரியர்: ஏ. சாமி; முன்னுரை: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்; பிரசுரம்: தமிழ்ப் பண்ணை, தியாகராய நகர், சென்னை; விலை: அணு 12.]

தினந்தோறும் பத்திரிகையைப் பிரித்தால் எத்தனையோ வியாதிகளுக்கு மருந்து விளம்பரங்கள் காணப்படுகின்றன. சர்வ ரோக சஞ்சீவி மருந்துகளும் விளம்பரம் செய்யப்படுகின்றன. ஆனால் யாராவது ஒரு வைத்தியன் இது வரையில் கவலைக்கு மருந்து கண்டு பிடித்திருக்கிறானா? அல்லோபதி, ஹோமியோபதி, ஹைட்ரோபதி முதலான வைத்திய முறைகள் எதிலாவது கவலைக்கு மருந்து இருக்கிறதா? அகஸ்தியர், கர்ருதர், யூகிமுனிவர், பாண்டியர் முதற் கொண்டு டாக்டர் குருசாமி முதலியார் வரையில் கவலைக்கு மருந்து சொல்லக் கூடியவர்கள் யாராவது உண்டா?—என்று கேட்டால், "இல்லை; இல்லை; இல்லவே இல்லை!" என்று தான் பதில் சொல்ல வேண்டியிருந்தது நேற்று வரையில்.

ஆனால் இன்றைக்கு இதோ ஒரு மனிதர் முன் வந்து "கவலைக்கு மருந்து உண்டு" என்று சொல்கிறார். 47 பக்கங்களில் அதைப் பற்றி மிகத் தெளிவாக எழுதி யிருக்கிறார். அதற்கு டாக்டர் ராஜாஜி அவர்கள் ஒரு முன்னுரையும் தந்திருக்கிறார்.

"ஒரு நல்ல இன்ஷியூரன்ஸ் கம்பெனியாகப் பார்த்து உயிரை இன்ஷியூரன்ஸ் செய்து கொள்ளுங்கள்; அதுதான் கவலைக்கு மருந்து" என்று ஆசிரியர் சாமி நமக்கு எடுத்துச் சொல்வதோடு, தமது சித்தாந்தத்தைத் தக்க காரணங்களைக் கொண்டும் உதாரண உபமேயங்களைக் கொண்டும் ஸ்தாபனம் செய்கிறார்.

இதைக் கேளுங்கள்:—"தபால் பார்ஸல்கள் மூலமாய் விலை பெற்ற பொருள்களையோ அல்லது பண நோட்டுக்களையோ அனுப்பும் போது அவைகளை வெறும் பார்ஸல்கள் மூலமாய் அனுப்புவீர்களா? அனுப்பமாட்டீர்கள், அவைகளை 'இன்ஷ்யூர் ரிஜிஸ்தர்' செய்து தான் அனுப்புவீர்கள். அப்படி அனுப்பப்படும் பார்ஸல்கள் அல்லது கடிதங்கள் காணமற் போய்விட்டால் அவைகளின் நஷ்டத்தை சரி செய்யத் தபால் ஆபீஸ்களில் கட்டணம் வாங்கப்படுகிறது. இந்தக் கட்டணத்தைச் சந்தோஷமாய்க் கொடுத்துவிட்டு நஷ்டம் ஏற்படும் என்ற கவலையே இல்லாமல் இருக்கிறோம். அப்படியே உயிர் என்னும் பெரு விலை கொண்ட பொருளுக்கு ஆபத்து ஏற்படுவதனால் உண்டாகும் நஷ்டத்தையும் சரி செய்ய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் சொற்பக் கட்டணத்தைக் கட்டிவிட்டுக் கவலையின்றி இருக்கலாம். லைப் இன்ஷுரன்ஸ் ஒன்றுதான் உயிரைப் பற்றிய கவலையை ஒழிக்கும். கவலை ஒழிந்து போனால் தேக பலம் நன்றாயிருக்கும். அதிகமாய்ச் சம்பாதிக்கலாம். நீண்டகாலம் சந்தோஷமாய் வாழலாம்."

இதற்கு ஆட்சேபணையாகச் சொல்லக் கூடியது ஏதேனும் இருக்கிறதா? இருந்தால், புத்தகத்தின் மற்றப் பகுதிகளையும் படியுங்கள்; ஆட்சேபங்கள் எல்லாம் பறந்து போகும்.

சாதாரணமாக, இன்ஷுரன்ஸ் ஏஜெண்டுகள் என்றால் எல்லாருக்குமே இளக்காரம். எழுத்தாளர்களுக்கோ கேட்க வேண்டியதில்லை. இன்ஷுரன்ஸ் ஏஜெண்டுகளைப் பரிகசித்து எத்தனையோ எழுத்தாளர்கள் நூதனப் பக் கட்டுரைகள் எழுதி யிருக்கிறார்கள். ஆனால், இந்தப் புத்தகத்தை மட்டும் படித்து விட்டால், எப்பேர்ப்பட்ட எழுத்தாளரும் உடனே சென்று தமது உயிரை இன்ஷுர் செய்து கொள்வார். (ஏனெனில், எழுத்தாளருக்குத்தான் மற்றவர்களைக் காட்டிலும் வாழ்க்கையில் கவலை அதிகம்.) அப்படி இந்தப் புத்தகத்தைப் படிக்கும் எந்த எழுத்தாளராவது தம் உயிரை உடனே இன்ஷுர் செய்து கொள்ளாவிட்டால், அவர் இன்ஷுரன்ஸ் ஏஜெண்டாக ஆகிவிடுவார்!

ராஜாஜி தமது முன்னுரையில் குறிப்பிட்டிருப்பது போல, "இந்தப் புத்தகம் எந்தக் குறிப்பிட்ட இன்ஷுரன்ஸ் கம்பெனியாரின் வியாபாரப் பெருக்கத்துக்காகவும் எழுதியதல்ல. பொது மக்களின் நன்மையைக் கருதியே எழுதியது."


எந்த ஒரு இன்ஷுரன்ஸ் கம்பெனியின் விளம்பரம் கூட இதில் சேர்க்கப்படவில்லை.

அதோடு, "எந்த விஷயத்தையும் பேசும் தமிழில் படிப்போர் மனதை இழுத்துச் செல்லும் முறையில் எழுதவேண்டு மென்பதற்கு ஏ. சாமி அவர்களின் நடை ஒரு நல்ல உதாரணமாகும்" என்று ராஜாஜி சொல்லியிருப்பதைப் பூரணமாக ஆமோதிக்கிறோம்.

மற்றும், மேற்படி ஆசிரியர் ஏ. சாமி என்பவர் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் உப அக்கிராசனர்களில் ஒருவர் என்பதையும் கடைசியாகக் குறிப்பிட்டு வைக்கிறோம்.


PAINT · SHALIMAR PAINT · SHALIMAR PAINT · SHALIMAR
SHALIMAR PAINT
SHALIMAR
WOODKOTE
உபயோகத்துக்குத் தயாராயுள்ள எனமல் பெயின்ட்
* வீட்டுக்கு உகந்தது
* நீடித்து உழைக்கக் கூடியது
* சிறந்த மழமழப்பளிக்க வல்லது
Shalimar Paint, Colour & Varnish Co. Ltd.,
Post Box 136. Madras
Agents carrying stocks :
Darragh, Smail & Co. Ltd. Alleppey
Peirce Leslie & Co. Ltd. of Calicut, Cochin, Coimbatore
Lewis Brown & Co. Ltd. Colombo
"அழகைக்காப்பது" (Protecting Beauty) என்ற 65 பக்கங்கள்கொண்ட சித்திரங்களுடன் கூடிய வர்ண புத்தகத்தை இந்தக் கூபனை அனுப்பி இலவசமாகப் பெறுங்கள்.
இதைக் கத்தரித்து உங்கள் பெயர், விலாசம் கொண்ட கடிதத்துடன் ஷாலிமார் பெயின்ட், த. பெ. 68 கல்கத்தா என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.
K





ஏஜண்டுகள்:—ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா; கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி; எம். ஏ. ஹமீதா & கோ., 20, டாம் தெரு, கொழும்பு.

Edited, Printed and Published by R. Krishnamurthy at The "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras

கல்கி



KALKI டிஸம்பர் 1, 1946 4 அணா

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள். நம்பர் 80 வரை நூல்கள்.

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒற்றை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக் கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கலந்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக் கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள் எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை. ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில் எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும் சன்னத்திற்கும் நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவுத் தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிறார்கள்.

தற்போது நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளதால், நூல் தேவையானவர்கள் தங்கள் மாகாணம் அல்லது சமஸ்தான டெக்ஸ்டைல் கண்ட்ரோல் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

மானேஜர்கள்: ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.

முன்னேற்றமே பிராபல்யத்தை நிரூபிக்கின்றது!

"லக்ஷ்மி"யின் வரவு செலவுகளின் பரிமாணத்தையும் அதனுடைய துரித தீவிர முன்னேற்றத்தையும், அதிக பொறுப்பையும் இவ்விலக்கங்களே தெரிவிக்கின்றன.

வருஷம்	புதிய வியாபாரம் மேலாக	மொத்த ஆஸ்திகள் மேலாக	தற்போது அமுலிலுள்ளது மேலாக
1941	1 கோடி, 1 லக்ஷம்	1 கோடி, 95 லக்ஷம்	8 கோடி, 36 லக்ஷம்
1943	2 „ 20 „	2 „ 50 „	10 „ 53 „
1945	3 „ 75 „	3 „ 41 „	14 „ 87 „

1945ம் வருஷத்தில் புதிய வியாபாரம் 1 கோடி 15 லக்ஷத்துக்குமேல் அதிகமாயுள்ளது

பூரா ஆயுள் பாலிஸிகளுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரத்திற்கு போனஸ் ரூ. 10/- வீதமும், எண்டௌமெண்ட் பாலிஸிகளுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரத்திற்கு போனஸ் ரூ. 8/- வீதமும் அளித்திருக்கிறது.

●

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்: லாகூர்)


மதராஸ் பிராஞ்சு: 4/105, அரமனைக்காரத் தெரு, ஜி. டி.

1/23, சாரதா ஜின் பாக்டரி கார்டன் திருச்சி ரோடு, கோயமுத்தூர்

REGD. NO. 4392



பெரீஸ் டோய்!!



பெரீஸ் பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு ஆரோக்யமான உணவு

Manufactured by PERRY & Co., USILAMPATTI, S. India

மதராஸ் ஸிடி ஏஜண்ட்ஸ்: சக்தி டிரேடிங் கம்பெனி
581, பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்